# மஜீது மாகாவியம்



டாக்டர். எம். எம். ஏ. அனஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஜீது மாகாவியம்

மூதூர்

எம்.எம்.ஏ அனஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் விபரம்

❖ நூலின் பெயர் :- மஜீது மாகாவியம்

❖ விடயம் :- காவியம் (கவிதை)

❖ ஆசிரியர் :- மூதூர் எம்.எம்.ஏ அனஸ்

❖ உரிமை :- நூலாசிரியருக்கு

❖ வெளியீடு :- உமர் நெய்னார் புலவர் கழகம் மூதூர்

❖ முதற் பதிப்பு :- 2017 பங்குனி

❖ பிரதிகள் :- 500

❖ விலை :- 250.00/=

❖ அச்சகம் :- ART Printers, 82, T.G.Sampanthar St,
Trincomalee, 0776566173

❖ ISBN :- 978-955-42444-5-0

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆரம்பக் குறள்

❋ அருளாளன் அன்புடையோன் அல்லாஹுவின் நாமம்
இருத்தியுளம் ஆரம்பம் ஈது.

❋ அருளன்பில் ஓங்கிய அல்லாஹ்வை உள்ளம்
இருத்தித் தொடங்கினேன் ஈது

❋ எல்லாப் புகழதுவும் ஏகன் இறைக்கெனச்
சொல்லித் துதித்தல் சிறப்பு

(மூதூர்.எம்.எம்.ஏ.அனஸ்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எனும்
தன் அரசியல் கலாபீடத்தில் என்னை

- கட்சியின் செயற்குழுச் செயலாளர்
- அரசியல் உயர்பீட உறுப்பினர்
- திருகோணமலை மாவட்ட அமைப்பாளர்

ஆகிய கல்வி ஆண்டுகளில் அமரச்செய்து
எனக்கு அரசியல் ஞானம் புகட்டிய
என் அரசியல் ஞான குரு
மர்ஹூம் எம் எச் எம் அஷ்ரஃப் அவர்கட்கு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**காப்பியக்கோ ஜின்னாஹ் ஷரிபுத்தீன்**
**அவர்கள் உவந்தளித்த வாழ்த்துப்பா.**

## வல்லான் அனசுக்கென் வாழ்த்து

இலக்கியம் செய்வ தெளிதல்ல யார்க்கும்
இலகுவில் கைவாரா வித்தை - குலவிருது
கொண்டிடில் சாலும் கவிஞர் அனஸ்அதனைத்
கொண்டுளார் தெய்வக் கொடை

புலவர் பரம்பரைப் பேறவர் தன்னை
நலம்பெறக் காவியம் பாட நலஞ்சேர்க்குங்
காரணி யாமன்றோ கற்றவர் காமுறுவர்
சீராம் படைப்பனைத்துந் தாம்

நாயகக் காவியம் நற்றமிழில் செய்தளித்தார்
தூய பெருந்தொண்டு செப்புகையில் - நாயகனின்
நல்லருள் கிட்டுமே நாளை மறுமையிலே
வல்லான் அனசுக்கென் வாழ்த்து

சோரா திலக்கியங்கள் செய்கின்றார் செய்திறனில்
சோரா திருக்குமவை செல்வங்கள் - சோராதே
இன்னும்பல் லாண்டுநல் ஏற்றமுறும் ஆக்கங்கள்
அன்னான் வழிகொள்வோம் ஆம்.

வாழியென வாழ்த்தி வளமார் தமிழ்படைக்க
ஆழிசூழ் பூபடைத்த அல்லாஹ்வைத் - தாழ்பணிந்து
வேண்டுகிறேன் அன்னான் வரலாற்றில் காலூன்ற
வேண்டுமருள் தந்தருள வே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதுகவிஞர் கலாபூசணம் தாமரைத் தீவான் அவர்கள் வழங்கிய வாழ்த்துப் பா

### மூதூர் அனஸ் வெண்பா பத்து

01. மூதூர் அனஸ்ஓர் முடிசூடா மன்னனடா
காதூர் தமிழார் கவிதையிலே — ஏதூர்
எவர்தான் நிற்பார் எதிரில் வளமாய்
அவர்செம் புலவரே ஆம்.

02. மரபின் வழியில் மரபுப்புலவர் அவர்
தரமாந் தமிழிலே வல்லார் - வரமாக
வந்தே பலநூலால் வாழும் கவியெல்லாம்
தந்தா ரவர்க்கோர் சலாம்.

03. இசுலாம் அளித்த இனியகொடை யாளர்
பசுவாய் இருந்தாலும் பாய்புலியே — உசுப்புகிற
வெண்பா தனையே மிகவும் விரும்புமொரு
பண்பார் அனஸைப் படி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

04. முதுமைக் கவிதைக்கு மூதூர்அனஸ் ஆவார்
புதுமைக் கவியினையும் போற்றிப் - பொதுவாய்
மரபுப் புலவர்களை மறவா திருக்குமவர்
அரபுக் குரியவரு மாம்

05. எத்தனையோ நூல்கள் எழுதி வழங்கியவர்
அத்தனையும் கற்றால் அறிவூறும் - புத்தம்
புதிதாகப் பாடல் புனைய நினைவோடும்
எதிலும் அனஸ்போல் இரு

06. அனஸை அழைக்கும் அரங்கம் சிறப்பாகும்
மனங்கள் மகிழுமாம் மக்களது – கனமான
கவியெல்லாம் கற்கையிலே கருத்தே முதனிற்கும்
அவமாம் அவரில் அவை.

07. வெண்பா குறள்கள் விருத்தம் பலவாகக்
கண்பார் கவிகள் கடைசிவரைப் - பண்பாய்
எழுதிக் குவித்தார்க்கு எதிர்நாள் பலவான
பழுதில் பரிசுண்டு பார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

08. இலக்கதனைக் கொண்ட இலக்கியத்தை ஆக்கி
கலக்கும் அனஸைக் கலங்காமல் - துலக்கியே
தூண்டிவிடின் நல்ல சுடர்விளக் காகியே
தாண்டுவார் மரபெலாந் தான்

09. எல்லாக் கவிகளையும் எழுதினாலு மீற்றில்
பொல்லாத வெண்பாப் புலியாகும் - வல்லமையும்
கொண்டு வரைவாரில் குறையொன் றினைக்கூட
கண்டிடு வாரில்லை காண்

10. அருங்கவிதை யாளர் அனஸ்வாழ்க நீடூழி!
பெரும்புலமை யார்தம் பெயர்வாழ்க! - தரும்பாவை
கற்றுயர்க மாணாக்கர் கலைவிழை வோர்யாரும்
முற்றுகவே என்பா முறை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலாபூஷணம் கவிஞர் கிண்ணியா ஏ.எம்.எம்.அலி அவர்கள் வழங்கிய வாழ்த்துப் பா

## அவருக்குப் பெயர்தான் அனஸ்

01. மூத்த பழம்பதி மூதூரில் வாழ்ந்துபுகழ்
பூத்த உமறுநெய் னாப்புலவர் - காத்த
குடும்ப விருட்சமது கொண்டகிளை யொன்றில்
அரும்பிய பூவே அனஸ்!

02. பாட்டன் பெரும்புலவர்! பாடிக் களித்தகுயில்!
நாட்டம் அவர்போலும் நாடோறும் - காட்டத்
தொடங்கினான் பேரன்! துலங்குதமி ழோடு
அடங்கினான் அல்லன் அனஸ்!

03. புலிக்குப் பிறந்தது பூனையா காதே
அதற்கொத்தான் பேரன் அனஸும்! — புலிக்குநிதம்
மாமிசம் மீதாசை! வண்டுக்குப் பூமீது!
ஆம்!அனஸுக் காசைபா மீது!

04. பேரனென வந்தே பிறந்தவ னாதலால்
நாடறிய நூலியற்றும் நாட்டமுற்றான் - காரறியா
வான மிருந்ததில்லை! வைய மிருந்ததில்லை
தானுமது வானான் அனஸ்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

05. பாவினம் யாதென் றவனறிந்தான் அன்னவனோ
பூவனஞ் சுற்றும் புதுவண்டு - போல்வனஞ்
சுற்றினான்! இன்பச் சுனையிலே ஆடிக்கைப்
பற்றினான் செந்தமிழ்ப் பா!

06. மரபுப்பா மற்றும் மரபுப்பா வோடு
வரவுப்பா வான புதுப்பா – எனப்பா
வகையாவுங் கண்டு வடித்தநூல் எல்லாம்
சுவைகாணச் சொல்லுந் தொடர்ந்து

07. வண்டு மலர்க்காவை வாஞ்சை யுடன்சுற்றிக்
கொண்டுகள் ளுண்டு குதூகலிக்கும் - இன்று
வரைக்கும் தமிழ்க்காவை வண்டுபோற் சுற்றும்
அவர்க்குப் பெயர்தான் அனஸ்!

08. இருபதுநூற் செல்வம் இவரெழுதிக் தந்தார்!
தருவ திலகல்ல தந்தார்! – ஒருசில
ஆண்டுகளில் செய்தளித்த ஆக்க இலக்கியங்கள்
போன்றுதரு வாரா பொறுத்து!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

09. நூற்புட்பம் யாவும் நுகர்ந்திடத் தக்கனவாம்
மேற்பச்சம் நீ வைத்தாய்! மேன்லேும் - நீபச்சம்
வைத்தெழுதும் நூல்வரிசை வாணாள் உள்ளவரை
பொய்த்திடா வாறெழுதிப் போ!

10. தந்தை முகையதீன் தானு மொருகவிஞன்
சிந்தை இனிக்கச் சிறுவனுக்குத் - தந்த
தமிழ்ப்பால் அருந்தியே தக்கவளம் பெற்றான்!
இனித்தாழ்வு இல்லையென் றெண்ணு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கலாபூசணம் கவிஞர் எம்.ஏ.பரீது**
**அவர்கள் அளித்த வாழ்த்துப்பா.**

## கீர்த்தியுடன் வாழ்க !

நானில நெய்தல் பதியெனும் நல்லூரில்
மேனிலை வாழ்ந்த பரம்பரையில் - தோன்றிய
அனஸ்எனும் தம்பி கணக்கில் கவியால்
தினமுறு வாழ்த்துடன் வாழ்க !

யாப்பு இலக்கணம் யாவும் தெளிவுற
கோப்புடன் கற்றுக் கவியாகி - மூப்புக்
கவிஞர் வழிநின்று முக்கலையும் கற்று
கவிகளே யாத்துநீ வாழ்க !

சீவிய காலம் முழுதும் சிறப்போங்கும்
காவியப் பாப்புனைந்து பாவலருள் - மேவியே
புலவனாய் மேதினி போற்றும் கவிஞர்
குலத்தின் குருசிலாய் வாழ்க !

கற்பனை இன்பக் கவின்தமிழ் சிந்திடும்
பொற்கவி பாடிப் பெரும் புகழ் - பெற்று
கவிஞர் குருசிலாய்க் காசினி நீயும்
குவிந்திடும் கீர்த்தியுடன் வாழ்க !

கருத்துச் செறிந்திடும் காவியம் யாத்து
தருதல் கவிஞர் கடனே — பருவத்துள்
பாடும் கவிதைகளைப் பாருளோர் நன்மையெனச்
சூடும் கவிதைகளை ஆக்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கவிமணி - அ.கௌரிதாசன் அவர்கள் வழங்கிய வாழ்த்துப் பா

### பெருமதியாய் நூல்தந்த பெருமகனை வாழ்த்துகிறேன்!

01. "அப்துல்மஜீத்" என்னு மொரு
அரசியலுக் குரிய வனைச்
செப்பிடுநற் காவி யமாய்
செய்தளித்த "அனஸ்" என்னும்
ஒப்பில்லாக் கவிஞ னிவன்
ஒருநூறு வருடங்கள்,
இப்புவியில் வாழ்ந் தின்னும்
இலக்கியங்கள் படைக்கட்டும்!

02. "கிண்ணியா மண்" ணதனைக்
கிழக்கீழ வாசனையைக்
கண்ணான செந் தமிழைக் -
கவியாள் இலக்கி யத்தை
எண்ணத்தில் இருப் பாக்கி
எழில்நடை போட்ட வனை
வண்ணத் தமிழ்க் காவி யமாய்
வடித்தெடுத்த அனஸ் வாழ்க!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03. தாய்எம் மொழி யெனவும்
தமிழ்பேசும் இனமெனவும்
வாய்மையுடன் வாழ்ந்த "மஜீத்"
வரலாற்றில் தனித் தலைவன்:
தூய்மைநிறை நெஞ்சு டைய
தூயவனைக் காவி யமாய் -
ஆய்வுசெய்த "மூதூர் அனஸ்"
ஆற்றலுக்கோர் அடையாளம்!

04. திட்டமிடும் மஜீத் "மூதூர்
திருமலைக்கு வாய்த்த மகன்!
மட்டுநகர், அம் பாறை
மாவட்டம் அனைத் திலுமே
சட்டமுடன் சம நீதி
சார்ந்திருக்க வேண்டு மென்று,
கட்டியமே கூறி வைத்தோன்
காலம்புகழ் கல் வெட்டு!

05. பேரிறைவன் அருட் கொடையே
பெருமான்நபி: காவி யத்தை
ஊர்துறந்த காவி யத்தை
உன்னதமாய் வாழ்ந்திட்ட
"வாப்புமரைக் கார்" என்பார்
வழிவந்த காவி யத்தைப்
பாப்பிசகு இலா வகையில்
படைத்தளித்த "அனஸ்" மேலும், ...........



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

06. தக்கபடி வாழ்ந்தி ருந்து
தரணியினை நீத்த வரில்
"அஷ்ரஃப், தங்கத்துரை,
அப்துல்மஜீத்" போன்றவரை
மக்களது மனங்களெலாம்
மகிழவைத்து அரசி யலைத்
தக்கபடி செய்த வர்க்கும்
தந்திட்டான் காவி யங்கள்!

07. தந்தையொரு கவிஞ ரெனில்
தனயனுக்கா கவிப் பஞ்சம்?
சந்ததியே புலவர் பெரும்
சாதனையே படைத்த வர்கள்
"உமர் நெய்னார்" சீறாவுக்(கு)
உரைசெய்தார்; தாய் வழியில் -
இவர்உறவு "பேரன்" எனில்
இலக்கியத் தேன் ஊறாதா?

08. மறவாது மக்க ளெலாம்
மரியாதை செய் விதமாய்
இறவாத புகழ் படைத்து
இந்நிலத்தில் வாழ்ந்த "மஜீத்" –
சிறப்பான தொண்ட னைத்தும்
சிதையாமல் ஒருங்கி ணைத்து,
"பெறுமதியாய் நூல் தந்த
பெருமகனை வாழ்த்து கின்றேன்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை

பட்டு கிழிந்தாலும் பகட்டு
சொட்டும் மங்காது
திங்கள் தேய்ந்தாலும் கதிர்
சீதளம் குறையாது
அப்துல் மஜீது மறைந்தாலுமவர் புகழ்
மங்காது மறையாது

அப்துல் மஜீது : பன்முகத் தகைமை கொண்ட - நல்ல
பழுத்த அரசியல் வாதி
எடுத்திடும் கருமங்கள் யாவையுமே - எளிதினில்
முடித்திடும் ஆற்றல் பெற்றவராவர்

அந்த மாதலைவர் மர்கூம் அப்துல் மஜீது அவர்கள் தாம் வாழ்ந்த காலகட்டத்தில் மக்கள் வியக்கும் வண்ணம் மகத்தான சேவைகளைச் செய்ததன் காரணமாக அவரைக் கல்லும் மண்ணும் காவியம் பாடும் தலைவன் என்று மக்களெல்லாம் போற்றிப் புகழ்ந்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த வகையிலே மூதூரைச் சேர்ந்த புலவர் சாலயர், உமர் நெய்னார் புலவர், கவிஞர் கலாபூசணம் எம்.ஏ.பரீது என்ற இரு நூற்றாண்டு கால கவித்துவப் புலமை மிக்க குடும்பத்தின் நான்காவது தலைமுறையில் தோன்றியவரும், எனது நேசத்துக்குரிய மாணவருமாகிய கவிஞ-மூதூர் எம்.எம்.ஏ.அனஸ் இன்று நிதர்சனமாகவே மாதலைவன் மஜீதவர்களைக் காவியத்தலைவனாகக் கொண்டு "**மஜீது மாகாவியம்**" என்ற காவிய நூலை யாத்திருப்பது மிகவும் மகிழ்ச்சிகுரியதாகவும், பாராட்டுக்குரியதாகவும் இருக்கின்றது.

நல்ல பல சமூகத் தலைவர்களை அடையாளம் கண்டு அவர்களின் வாழ்க்கை வரலாறுகளைக் காவியமாக யாத்துவரும் மூதூர் எம்.எம்.ஏ.அனஸ் இன்னும்பல பெரியார்களின் வரலாறுகளையும் காவிய நூல்களாக வெளிக்கொணர வேண்டும் எனக் கேட்டுக் கொள்வதுடன் அவரின் இலக்கியப் பணிகள் தமிழ்கூறும் நல்லுலகில் தலைசிறந் தோங்க வேண்டுமென்றும் வாழ்த்துகின்றேன்.

நன்றி.

ஏ.சி.எம்.மக்கீன்
(ஓய்வுநிலை அதிபர்)
மூதூர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

மஜீது மாகாவியம் எனும் இந்நூல் எனது நூல்களின் வரிசையில் இருபத்தொராவது (21) நூலாகவும் எனது காவிய நூல்கள் வரிசையில் ஆறாவது (6) காவிய நூலாகவும் வெளிவருவதையிட்டுப் பெரிதும் மகிழ்ச்சியுறுகின்றேன். ஏற்கனவே ஊர் துறந்த காவியம், நாயகக் காவியம், வாப்புமரைக்கார் வழிக்காவியம் அஷ்ர.ீ.ப் அமர காவியம், தங்கத்துரைக் காவியம் ஆகிய ஐந்து (5) காவிய நூல்களை வெளியிட்ட நான்

தற்போது மாபெரும் அரசியல் தலைவராகத் திகழ்ந்த முன்னாள் மூதூர்த் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினரும் தகவல் ஒலிபரப்புத் துறைப் பிரதியமைச்சரும் திருகோணமலை மாவட்ட அரசியல் அதிகாரியுமான மர்கூம் ஏ.எல்.அப்துல் மஜீது அவர்களைப் பற்றி மஜீது மாகாவியம் என்ற இக்காவிய நூலை வெளியிடுவதில் மாபெரும் மகிழ்ச்சியடைகிறேன். மக்களின் மனங்களில் வாழும் மாபெரும் தலைவனைக் காவிமாய்ப் பாடுவதில் பூரிப்படைகின்றேன்.

கல்லும் மண்ணும் காவியம் பாடும் தலைவன் என்று பேசப்படுகின்ற போற்றப்படுகின்ற மாதலைவன் மஜீது அவர்களுக்கு உண்மையாகவே தேன்தமிழில் காவியம் பாடிய வாய்ப்பு எனக்குக் கிட்டியதையிட்டு பெருமையுறுகின்றேன். தமிழ் வளர்த்த மாமனிதருக்கு தமிழாலே கவியாத்ததையிட்டு உவகையுறுகிறேன்.

ஆளுமையும் ஆற்றலும் மிகைத்த மாதலைவர் மர்கூம் மஜீதவர்களின் வரலாறுகள் வருங்கால சந்ததிகளுக்கும் தலைமைத்துவத்தின் தகைமையைச் செப்பி நிற்கும் என்ற திடமான நம்பிக்கை எனக்குண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மர்ஹூம் மஜீது அவர்களின் வாழ்க்கை வரலாற்றுக் குறிப்புகளை எனக்குத் தந்துதவிய மூதூரைச்சேர்ந்த அல்-ஹாஜ் ஏ.ஜே.றபீக் (முன்னாள் தகவல் ஒலிபரப்புத்துறை பிரதியமைச்சர் மர்கூம் அப்துல் மஜீது அவர்களின் செயலாளர்) திரு.க.தேவகடாட்சம் ஆகியோர்களுக்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ள கின்றேன்.

மர்கூம் அப்துல் மஜீது அவர்களின் அரசியல் ஆற்றலாலும் சாணக்கியத்தாலும் கவரப்பட்ட எனது தந்தையார் கவிஞர் மர்கூம் எஸ்.எல்.எம்.முகைதீன் அவர்கள் மர்கூம் அப்துல் மஜீது அவர்களைப்பற்றி எழுதிய கவிதையொன்றில் வரும் சிலஅடிகள் பெரிதும் என்னைக் கவர்ந்தன

- வீரமது செறிந்தமுகம் பகைமைதனை
  விரட்டுகிற விழிகளுடன் தூயவுள்ளம்
  தீரமேதான் நிறைந்தசெயல் அவனுக்குத்
  தெரியாதோர் ஊரினிலே யாருமில்லை

- அழகுடனே செந்தமிழைச் செப்பிடுவோன்
  அரசியலில் தூரத்து நோக்குடையோன்
  பழகிடுவோர் மெச்சுகிற பண்புடையோன்
  பருதியென எங்குமறி முகமானோன்

- சோர்வென்ற சொல்தெரியாத் துடிப்பாளன்
  சேவையுடன் நற்றலைமை தந்திட்டோன்
  சீர்மிக்க கொள்கையிலே துலங்கிடடோன்
  செழுமைதனை இனம்காணச் செய்திட்டோன்

- முற்போக்கு மன்றங்கள் அமைத்திட்டோன்
  முத்தமிழை வளர்க்கவிழா எடுத்திட்டோன்
  அற்புதமே அவன்செயல்கள் யாவும்மிங்கு
  ஆண்டவனின் அருளேதான் அவன்எமக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கற்பனையில் ஊர்உயர்வைக் கண்டிட்டான்
  கற்கள்கதை சொல்கட்டடம் தந்திட்டான்
  அற்புதமாய் அருந்திட்டம் வகுத்திட்டான்
  அழியாத புகழதனை அடைந்திட்டான்

என எழுதினார்கள். இக்கவிதை கவிஞர் மூதூர் எஸ்.எல்.எம்.முகைதீன் கவிதைகள் என்ற நூலில் இடம் பெற்றுள்ளது. இக்கவிதை மர்கூம் மஜீது அவர்களின் ஒட்டுமொத்த அரசியல் ஆற்றலையும் ஆளுமையையும் காட்டி நிற்பதைக் காணக்கூடியதாக இருக்கின்றது இதனால் தான் ஏற்கனவே நான் வெளியிட்ட "கவிஞர் மூதூர் எஸ்.எல்.எம்.முகைதீன் கவிதைகளில் தலைமைத்துவத் தகைமைகள்" என்ற ஆய்வு நூலில் மர்கூம் மஜீது பற்றிய இக்கவிதை அடிகளையும் ஆய்வுக்குட் படுத்தியுள்ளேன்.

குறிப்பாக திருகோணமலை மாவட்டத்தில் முஸ்லிம் சமூகத்தாரிடை அரசியல் பற்றிய அங்கலாய்ப்புகள் நிகழ்கின்ற ஒவ்வோர் சந்தர்ப்பங்களிலும் மர்கூம் மஜீது அவர்களின் நாமம் ஒலிக்கப்பட்டுக்கொண்டே இருக்கும். இன்னும் ஓர் நூற்றாண்டு காலம் கடந்த பின்பு திருமலை மாவட்ட முஸ்லிம் இளைஞர்கள் ஏந்திவரும் அரசியல் எழுச்சிக் கொடிகளிலெல்லாம் மர்கூம் அப்துல் மஜீது அவர்களின் உருவம் துலங்கிக்கொண்டே இருக்கும்.

நன்றி

பெரியபாலம் — எம்.எம்.ஏ.அனஸ்
மூதூர் - 05 — 20.03.2017
தொடர்பு :- 0776288299



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஜீது மாகாவியம்

## இறைஞ்சல்

01. எம்மினத்தின் உயர்ச்சிக்கு ஏற்றதோர் தலைமை
எழிலாகத் தந்திட்ட ஏந்தலர்அப் துல்மஜீத்
எம்பியவர் மகிமையினை ஏற்றமாய்ப் பாட
ஏகனே உன்னருளை எனக்கருள்வாய் நன்கு

02. செந்தமிழில் தேர்ந்திட்ட செம்மல்மஜீ தவரை
சிறப்பான காவியமாய்ச் செப்பிடவே நானும்
தந்திடுவாய் இறையோனே தமிழ்வளத்தை எனக்குத்
தனித்தபெரும் சமுத்திரமாய்த் தானேதான் திகழ

## காப்பு

03. நல்லதொரு தலைவனென நாட்டினிலே திகழ்ந்த
நாமத்து அப்துல்மஜீத் நாயகனைக் கவியாய்ச்
சொல்லுகையில் எக்குறையும் சேர்ந்திடா திருக்கச்
செகம்படைத்த இறையோனே சிறந்ததாம் காப்பு

## அவையடக்கம்

04. காவியங்கள் பாடுதற்கு கடலளவாய்த் தமிழைக்
கற்றறிதல் வேண்டுமேதான் கடுகளவு கற்று
காவியமே பாடநானும் கடும்வாஞ்சை கொண்டமை
கான்கோழி ஆடியதாய்க் கருதிடுமே உலகு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நகர் வாழ்த்து

05. கொட்டியாரக் குடாக்கடலும் கிண்ணியாபதி மண்ணைக்
கட்டியேதான் தழுவியங்கு கனமீனை நல்கும்
பட்டியாக மாடாடு பெரும்செல்வம் ஈயும்
பார்க்கின்ற இடமெல்லாம் பசுமையேதான் தோன்றும்

06. மாவலியின் நீரதுவும் மண்ணதனைத் தழுவும்
மாண்பாலே கிண்ணியாவும் மாசெல்வம் காணும்
ஆவலுடன் பார்த்திடவே அவ்வூரெழில் தூண்டும்
ஆண்டவனின் கொடைநிறைந்த அழகுபதி தானே

07. செந்நெல்விளை கழனிகளால் செழுமையது பெற்று
செல்வத்தின் களஞ்சியமாய் சிறப்புற்றே திகழும்
எந்தவிதக் குறையுமிலா எழில்பதிகிண் ணியாவை
ஏற்றமிகு ஊரென்றே எண்ணிடுவோம் நாமும்

08 கிண்ணியாவின் கீர்த்தியினைக் கவியினிலே - பாடல்
கடிகமிகு காறியமாய்க் காண்கின்றேன் யானும்
மண்ணினிலே மகிமைதனில் மிளிருமிந்த ஊரில்
மனிதத்தின் மாண்பெல்லாம் மாபெரிதாய்த் துலங்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காவியம்

08. மஜீதென்னும் மாதலைவன் மகிமையினைப் பாட
மூதூர்அனஸ் ஆகியநான் முயலுகையில் எனக்கோ
நிஜமாக அவர்சேவை நினைவுகளில் வந்து
நன்றெனவே பாடுதற்கு நல்இலகாய் உளதே

09. காவியமாம் இந்நூலும் கருவாக மஜீதைக்
காத்திரமாய்க் கொண்டமைந்து காட்சிதரு வதனால்
காவியமாம் இன்னதுயும் கனபுகழைப் பெறுமே
கதையல்ல உண்மையிது கருதிடுவோம் நாமும்

10. கார்த்திகையின் பதினைந்து காலமாயிரத் துத்தொழா
இரத்திமுப்பத் திரண்டினிலே இன்னரும்பே றெனவே
பேர்அப்துல் லத்திப்பவர் புத்திரனாய் மஜீது
பிறந்திட்டார் கிண்ணியாபதி புகழுறவே ஆங்கு

11. ஆரம்பக் கல்விதனை அப்துல்மஜீத் அவரும்
ஆண்பள்ளி கிண்ணியாவில் அழகுறவே கற்றார்
பேரறிவின் தாகத்தால் பின்னரவர் படிப்பை
புகழுறுஇந் துக்கல்லூரி திருமலைதனில் கற்றார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. மட்டுநகர் சிவானந்தா மாகூடம் தனிலும்
மஜீதவரும் கல்வியினை மாண்புடனே கற்றார்
எட்டிடவே பட்டமதை ஏட்டுப்படிப் பதனில்
ஏகிட்டார் இந்தியாவெனும் எழில்நாடு தனுக்கே

13. வாடியாகல் லூரிதனிலே வாஞ்சையுடன் கற்றார்
வாய்த்தநல் பிரசிடென்சி வளாகமது தனிலும்
கூடவேயவர் ஞானஜமால் கல்லூரி தனிலும்
கற்றேதான் இந்தியாவில் கல்வியிலே தேர்ந்தார்

14. பட்டமது பெற்றவரும் பாரதத்தை விடுத்து
பிறந்தகமாம் கிண்ணியாபதி பிரியமுடன் மீண்டார்
பட்டமது பெற்றமுதல்ப் பெருமகனாய் முஸ்லிம்
பெருங்குடியில் மஜீதவரும் பெரும்கீர்த்தி பெற்றார்

15. கிண்ணியாவின் மத்தியதாம் கல்லூரி தனுக்கு
காத்திரமாம் அதிபர்எனக் கடமைதனை ஏற்றார்
கண்ணென்றே கலைக்கூடம் கருத்துடனே காத்து
கடும்உயர்வு அதுகாணக் கருவாகிப் போனார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. அதிபரென ஓராண்டு அமர்ந்தேதான் மஜிதும்
அரும்பணிகள் அழகுறவே ஆற்றிட்டார் அதிகம்
பதிகளெல்லாம் உயர்ச்சியுற பதவியிது போதா
பகன்றவரும் அரசியலில் பாதமது பதித்தார்

17. அரசியலின் அரங்கினிலே அன்னவரும் ஆண்டு
ஆயிரத்துத் தொழாயிரத்து அறுபதிலே தானே
பிரவேசம் செய்தேதான் பெரும்வெற்றி கண்டார்
பிரபலமும் நாட்டினிலே பெரிதாகப் பெற்றார்

18. பதினேழு வருடங்கள் பாராளு மன்றப்
பிரதிநிதி என்றானார் பெருந்தொடராய்த் தானே
பதியெல்லாம் நல்முறையில் பெருஞ்சேவை யாற்றி
பாங்காக மக்கள்நலம் பேணிட்டார் அவரும்

19. பிரதியமைச் சர்என்றும் பதிலமைச்சர் என்றும்
பதவிதனை வகித்தவரும் பேர்புகழே பெற்றார்
அரசியலதி காரியெனும் அரும்பதவி ஏற்றும்
ஆனபெரும் சேவைகளை ஆற்றியுமே மகிழ்ந்தார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20. சல்மாபீ பீஎன்கின்ற சங்கைமிகு பெண்ணை
சந்தோச வாழ்வினது சொந்தமென ஏற்றார்
இல்வாழ்வின் ஏற்றமென ஈர்பெண்கள் ஓர்ஆண்
இன்னரிய மக்கள்என இறைபேறாய்ப் பெற்றார்

21. ஆண்மகனாம் நஜீப்என்பார் அரசியலில் உயர்ந்து
ஆகிட்டார் முதலமைச்சர் ஆனபெரும் பதவி
காண்கின்றோம் மைந்தரிவர் கனத்தபல உயர்வில்
கால்பதித்து நிற்பதையும் களிப்புடனே நாமும்

22. பொருள்சேர்க்கும் அரசியலில் பணிசெய்தே வாழ்ந்து
பணம்சேர்க்கா நிலையினிலே பக்குவமாய் நடந்தார்
வறுமைக்கு அஞ்சாது வாய்மைவழி நின்றார்
வரலாற்றில் இதனாலே வாழ்கின்றார் இனிது

23. நாட்டினது நடப்பெல்லாம் நன்றேதான் அறிந்து
நாளையதாம் நிகழ்வுகளை நன்கேதான் சொல்வார்
காட்டினிலும் பயணங்கள் களிப்புடனே செய்து
கனத்தபல இடங்களினைக் கண்டேதான் களித்தார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24. செல்கின்ற இடமெல்லாம் சிறப்பேதான் பெற்றார்
சிறந்தநல்ல சிந்தனையின் செழிப்பிடமும் ஆனார்
வல்லவராம் மஜீதென்று வாழ்த்திடவே மக்கள்
வழங்கிட்ட தலைமையினால் வரலாறே படைத்தார்

25. சாதிமத பேதங்களைச் சற்றேனும் நோக்காச்
சீரியதாம் தன்மையிலே சிறந்தேதான் திகழ்ந்தார்
ஓதியுணர்ந் தோர்களினை உவந்தேதான் அவரும்
ஓர்குறையும் இல்லாத உயர்தலைமை தந்தார்

26. நகைச்சுவையும் அவர்நாவில் நன்கேதான் மிளிர
நம்பியுமே வந்தவரை நன்றெனவே காத்தார்
பகைவர்களும் பணிந்துவரும் பெருஞ்சிறப்பும் பெற்றார்
பாரினிலே இவர்தலைமை பேரதிசயம் தானே

27. பிறமதங்கள் அனைத்தினையும் பேணுதலாய் மதித்தார்
பொறுமையினால் பகைமைகளைப் பெரிதுமவர் வென்றார்
வரலாற்று மனிதரென வையத்தில் உயர்ந்தார்
வாழ்வாங்கு வாழ்ந்தவரும் வான்புகழே பெற்றார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

28. தேவையென வருவோர்க்கு தானுவந்து ஈந்தார்
தெரியாத நபரிடத்தும் தெரிந்தவர்போல் கதைத்தார்
நாவையுமே என்றுமவர் நன்முறையில் காத்தார்
நண்பர்களைக் காண்பதற்கு நாடிமனை சென்றார்

29. தாய்நாட்டுப் பற்றினிலே தலைசிறந்து நின்றார்
தாய்என்று தானேதான் தாய்நாட்டை நினைத்தார்
தூய்மைமிகு உள்ளமுடன் துலங்கிட்டார் என்றும்
துஞ்சாமை கல்வியுடன் துணிவுடைமை பெற்றார்

30. கனிந்தநற் கருத்துரையால் கேட்போரைக் கவர்ந்து
காத்திரமாய்த் தன்பக்கம் கவனமுடன் ஈர்த்தார்
இனிதான தன்மைகளின் இருப்பிடமும் ஆகி
இந்நாட்டில் பெரும்புகழில் இலங்கிட்டார் இவரும்

31. எளிமைமிகு தன்மையினை என்றுமவர் பற்றி
ஏழைகளின் தோழமையை ஏற்றமெனக் கொண்டார்
துளியளவு பெருமையையும் தூரவே தள்ளி
தூய்மைமிகு பண்பினிலே துலங்கிட்டார் என்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

32. இலக்கியத்தில் என்றுமவர் இன்பமது கண்டார்
இன்பத்தமிழ் எம்மொழியென இயம்பியேதான் மகிழ்ந்தார்
கலகலப்பாய் இருப்பதிலே கடும்பிரியம் கொண்டார்
காசினியில் இவர்போன்றோர் காண்பதுவோ அரிது

33. எவரைத்தான் கண்டிடினும் எப்படியோ நலமோ
என்றேதான் வினவிடுவார் எல்லோரும் வியக்க
தவறாக யாரையுமே தானெண்ணா வண்ணம்
தன்னவரே என்றேதான் தான்நினைத்துக் கொள்வார்

34. தானைத்தலை வன்னென்றே தடமவரும் பதித்தார்
தீயோரின் கொட்டமெலாம் தானடக்கி ஜெயித்தார்
கானகம்முதல் கடல்வரைக்கும் காத்திரமாய் எமது
கனஉரிமை அத்தனையும் காட்டியுமே தந்தார்

35. சொல்லிவிட்ட விடயமெலாம் செயல்தன்னில் காட்டி
சாதனைகள் படைத்தவரும் சரித்திரத்தில் நிலைத்தார்
நல்லதொரு தலைவனென நம்நெஞ்சம் நிறைந்த
நாயகனாம் அப்துல்மஜீத் நாமம்நாம் மறவோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

36. நல்லவரைப் பக்கத்தில் நன்கமர்த்தி என்றும்
நல்லதாம் காரியங்கள் நாளுமவர் செய்தார்
பொல்லாரும் பயந்தவர்க்குப் பணிந்தேதான் வந்தார்
பண்பினிலே மஜீதவரும் புகழ்பூத்தே உயர்ந்தார்

37. அறியாமை இருளினிலே அகப்பட்ட இனத்தின்
ஆதவனாய் ஆகிட்டார் அப்துல்மஜீத் தானே
நெறியறிந்து மக்களுமே நெடுநிலத்தில் வாழ
நல்லவழி காட்டியென நாம்நவில்வோம் இவரை

38. இயலாதென என்றுமவர் இயம்பியதும் இல்லை
இயம்பியவை யாவையுமே இனிதேதான் செய்தார்
அயர்வென்னு ஓர்நாளும் அவர்இருக்க வில்லை
அருந்தலைவர் மஜீதேதான் அறைவோமே நாமும்

39. பணத்தினது பக்கமவர் பணியாமல் இருந்தார்
பண்புக்குப் பணிந்தொழுகும் பாங்கினிலே உயர்ந்தார்
குணத்தினிலும் அவரைநாம் குன்றென்றே சொல்வோம்
குவலயத்தில் அவர்போன்றோர் குறைவேதான் அம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

40. பாம்புகளே நிறைந்திட்ட பற்றைக்கா டுகளும்
பாமரர்கள் பயிர்செய்யும் படுகாடு யாவும்
சோம்பலது இன்றியவர் சுற்றியேதான் வந்து
சனங்களது வாழ்க்கைமுறை சரியாகப் புரிந்தார்

41. அரசியலின் ஞானத்தில் அதிசிறப்புக் கண்டார்
அதனாலே அவர்கருத்து அரசியல்தத் துவமே
பரந்திட்ட சிந்தனையின் பெருங்கடலும் அவரே
பகர்ந்திடுவோம் இன்னதனை பார்எங்கும் நாமே

42. தமிழ்தன்னைத் தன்வாயில் தவழவிட்டு அதனின்
தேன்சுவையில் என்றுமவர் திகைத்தேதான் நின்றார்
அமுதான அம்மொழிக்கு அரும்பணிகள் பலவும்
ஆற்றியவர் அகமகிழ்வு அதிகமேதான் உற்றார்

43. வரட்சியிலே வாடிட்ட வயல்நிலங்கள் யாவும்
வளமாக நீர்பாய்ந்து விளைச்சல்மிகை ஆக
முறையாக வகைசெய்தார் மறவோமே நாமும்
மண்ணினிலே இச்சேவை மாபெரிதே என்போம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

44. குளங்களெலாம் திருத்தியவர் கூடியதாம் நீரால்
கழனியெலாம் செழுமையுடன் காட்சிகொளச் செய்தார்
வளம்மிக்க பகுதிகளாய் விருத்தியே உற்று
விளங்கியதே அவர்தொகுதி வியப்பேதான் அம்மா

45. விவசாயம் விருத்தியுற வழிவகைகள் செய்தார்
வாய்க்காலுடன் காடிகளும் வளம்மிக்க குளங்களும்
அவராலே கிட்டியதை அறிவோமே நாமும்
அதிசிறப்பு விவசாயம் அடைந்ததுவே இதனால்

46. சின்னஞ்சிறு தோணியிலே சென்றேதான் கடலில்
சிரமமுடன் மீன்பிடித்தோர் செல்வர்கள் என்றே
உன்னதமாம் நிலைக்காக உவந்தளித்தார் பெரும்போட்
உண்மையிது தானேதான் உணர்ந்திடுவோம் நாமும்

47. மீனவர்கள் மேன்மையுற முயன்றுபணி செய்தார்
மீன்பிடிபோட் நிறையவேதான் மீனவர்க்குக் கொடுத்தார்
மீனவர்கள் குடியேற்றம் மீனவர்க்காம் வீடு
மேலான சேவைகளை மஜீதிவரே செய்தார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

48. தாய்நாட்டில் முஸ்லிம்கள் தனித்துவத்து இனமே
தாழ்ந்தேதான் பணிந்திடுதல் தகாதேதான் அவர்க்கு
ஆய்ந்துநற் கருத்துரையை அறைந்திட்டார் மஜீதும்
அரசியலில் இவர்தலைமை அதிசயமே யார்க்கும்

49. இனவாதி மஜீதென்று இந்நாட்டில் யாரும்
இயம்பிடவே மாட்டார்கள் இனமெல்லாம் மதித்தார்
கனவினிலும் இனவுறவே கருத்தாகக் கொண்டார்
காசினியில் இவர்போன்றோர் காண்பதுவும் அரிது

50. அச்சமதை மஜீதவரும் அடைந்ததுவும் இல்லை
ஆருக்கும் அடிபணிந்து அவர்போனதும் இல்லை
அச்சமெலாம் இறைக்கென்றே அசையாது நின்றார்
அதிசயமே இவர்துணிவு அறிவோமே நாமும்

51. வீரர்தான் மஜீதென்று விதந்துரைப்போம் நாமும்
வாழ்வினிலே கோழையென விளங்கியதும் இல்லை
போருக்கும் தயாரென்று பகன்றேதான் நின்றார்
பாரினிலே அதிசயமாய் பார்த்திடுவோம் அவரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

52. சேவைக்கோர் மஜீதென்று சரிதையுமே செப்பும்
சிறந்ததோர் சேவகனாய் செகத்தினிலே திகழ்ந்தார்
நாவையுமே நாளுமவர் நன்முறையில் காத்தார்
நாட்டினிலே இவருக்கு நிகர்தலைவர் அரிது

53. மஜீதென்னும் நாமத்தை நாம்மொழியும் போதில்
மகிழ்வினிலே எம்முள்ளம் மிளிர்கிறதே நன்கு
நிஜமாக இவர்போன்ற நல்லபெருந் தலைவர்
நாட்டிற்கு நாயனவன் நற்கொடையே என்போம்

54. காலமெலாம் தன்கட்சியில் காலூன்றி நின்றார்
கட்சியது தாவாமல் கொள்கைதனைக் காத்தார்
சாலவே சிறந்தவராய் சனங்களுமே போற்றச்
சரித்திரத்து நாயகனாய் சாகாவரம் பெற்றார்

55. சிங்கநிகர் தலைமையெனச் செப்புகிற தன்மை
சங்கைமிகு மஜீதவர்க்கு சிறப்புப்பெயர் தானே
எங்கணுமே இன்றவரின் ஏற்றத்தைச் செப்பும்
எழில்நிலைமை உள்ளதனை எல்லோரும் புரிவர்

56. பேச்சினிலே வாய்மைதனை பெரிதாகக் காத்தார்
பெரியோரை மதிப்பதிலே பேணுதலே கொண்டார்
பூச்சுக்காய் இல்லாமல் புனிதமுடன் கதைத்தார்
புவியினிலே பெரும்வியப்பாய் புரிவோமே அவரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

57. மேடைகளின் வேந்தனென மேன்மையேதான் பெற்றார்
மக்கள்பணி செய்வதிலே மகிழ்ச்சியதும் கண்டார்
காடையர்கள் மத்தியிலே கடும்வீரம் காத்தார்
கற்பனையில் ஊர்உயர்வைக் கண்டேதான் மகிழ்ந்தார்

58. எழுச்சிமிகு நற்கருத்தை எடுத்தென்றும் உரைத்தார்
ஏற்றமென மக்களுமே ஏற்றதனை உயர்ந்தார்
அழுகையிலே திகழ்ந்தோர்க்கும் ஆறுதலவ ரானார்
அருந்தலைவர் இவருக்கு ஆர்நிகரோ இங்கு

59. ஆடையென எம்மினத்தை அலங்காரம் செய்து
அழகுடனே அதைக்காத்த அப்துல்மஜீத் நாமம்
வாடையென என்றுமிந்த வையகத்தில் வீசும்
வளமுடனே அவர்புகழும் விளங்கிடுமே நாட்டில்

60. தன்சமூகச் சிந்தனையில் தினமுமவர் திளைத்தார்
தாய்நாட்டில் முஸ்லிம்கள் தலைநிமிர்ந்து வாழ
நன்றேதான் காரியங்கள் நாளுமவர் செய்தார்
நாட்டினிலே நற்கீர்த்தி நன்றெனவே பெற்றார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

61. கடலுடனே கழனியதும் காசினியின் வாழ்வாய்
கருதித்தான் வாழ்ந்தோரை கல்வியிலே காலைத்
திடமாகப் பதித்திடவே திட்டமது தீட்டி
தகுமுறையில் உயர்ந்திடவே தலைவர்மஜீத் செய்தார்

62. வறுமைக்கு ஆட்பட்டு வாழ்ந்திட்ட அன்னோர்
வளமாகச் செல்வத்தில் வாழவழி வகுத்தார்
சிறுமைநிலை மக்களெலாம் செழுமைதனைக் காண
சிந்தனையின் புரட்சிதனை சிறப்பாகச் செய்தார்

63. அரசியலை இலக்கியத்தை அவரும்இரு கண்ணாய்
அருமையாய்க் கருதித்தான் அரும்பணிகள் செய்தார்
வரலாற்றில் இதனாலே வான்புகழைப் பெற்றார்
வையத்தில் இவர்பணிகள் வியப்பேதான் அம்மா

64. இஸ்லாமியக் கலாசாரம் இந்நாட்டில் ஓங்க
இனிதவரும் முயன்றிட்டார் ஈதறிவோம் நாமும்
அஸ்தமனம் ஆகாமல் அதுஉயர அவரும்
ஆற்றிட்ட அரும்பணிகள் அழியாதே நாட்டில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

65. அஞ்சாத நெஞ்சத்தின் அழகுருவும் அவரே
அரியபெரும் சிந்தனையின் ஆழ்கடலும் அவரே
துஞ்சாமை இல்லாத துடிப்பாளன் என்றும்
துலங்கியவர் மஜீதேதான் துணிந்துரைப்போம் நாமும்

66. தியாகமதைத் தன்னுடைய தொனிப்பொருளாய்க் கொண்டு
திறம்படவே செயலாற்றித் தகுதலைமை தந்தார்
தயாளமிகு சிந்தையிலும் தலைசிறந்து அவரும்
திகழ்ந்ததனை நன்கேதான் தெரிந்திட்டோம் நாமும்

67. எம்மினத்தின் எழுச்சிக்கு ஏகனவன் கொடையே
என்றேதான் அப்துல்மஜீத் எமக்கிங்கே ஆனார்
தம்பணியோ மக்கள்பணி தான்என்றே உரைத்துத்
தலைமைக்குத் தனியர்த்தம் தந்தவரும் நின்றார்

68. தனைமைத்தனம் என்கையிலே தாவிமஜீத் நினைவு
தானேதான் வந்தெம்மில் திளைக்கிறதே நன்கு
நிலைத்தபுகழ் கொண்டவரின் நிகரற்ற தலைமை
நிலத்தினிலே மற்றவரால் நல்கிடவே முடியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

69. காடெல்லாம் செந்நெல்லின் கழனியென மாறக்
கனத்தபெரும் சேவைகளின் கர்த்தாவாய்த் திகழ்ந்தார்
வாடுகிற பயிர்தனுக்கு வான்மழையே போல
வரமென்றே எமக்கவரும் வாய்த்திட்டார் தானே

70. பயணங்கள் மக்களுக்குப் பாங்குடனே அமைய
பதிதனிலே நல்லபெரும் பாதைகளை அமைத்தார்
உயரியதாம் சிந்தனையால் உணர்ந்தவரும் செய்த
உன்னதமாம் சேவைகளால் உயர்ந்திட்டார் புகழில்

71. இருளினது இருப்பிடமாய் இருந்ததன்னூர் களினை
இன்னவரும் மின்னொளியால் இலங்கிடவே செய்தார்
வரலாறு காணாத வகையினிலே சேவை
வழங்கியேதான் மக்கள்உளம் வாழும்வழி கண்டார்

72. மூதூர்மஜீத் என்றாலோ முழுநாடும் அறியும்
மக்கள்பணி என்றவரும் மூழ்கியே இருந்தார்
ஏதுபணி என்றாலும் எல்லாமும் இயலும்
என்றேதான் உரைத்தவரும் ஏராளம் செய்தார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

73. மக்கள்பணி செய்வதிலே மனமகிழ்வு கண்டார்
மக்கள்பணி செய்வதுதான் மகேசன்பணி என்றார்
அக்கறையாய் அப்துல்மஜீத் ஆனபணி அனைத்தும்
ஆற்றியதால் மக்களது அகமெல்லாம் நிறைந்தார்

74. மேடைதனில் இவர்பேச்சு முழக்கமென மாறும்
மடங்காதோர் யாவருமே மயங்குவரிவ ருரையில்
ஆடைகளும் தேர்ந்தேதான் அழகுடனே அணிவார்
அவர்நடத்தை எல்லாமும் அழகென்றே ஆகும்

75. இலக்கியத்தில் நாட்டமவர் இனிதேதான் கொண்டார்
இன்பத்தமிழ் எம்மொழியென இயம்பியே நின்றார்
துலங்கிடுமே அவர்பேச்சில் தூயதமிழ் வார்த்தை
துஞ்சிட்ட வரலாறு துளியும்அவரக் கில்லை

76. காமராஜ்பல் கலைக்கழகத் தில்அவரும் அன்று
காத்திரமாய் இஸ்லாமியத் தமிழ்ஆராய்ச் சிஎனும்
நாமத்தின் தனிப்பிரிவை நம்மஜீதே தந்தார்
நானிலத்தில் இச்சேவை நனிசிறப்பே என்போம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

77. அரசியலில் அவர்வருகை ஆகியதே இனத்தின்
அதிசெழுமை என்றேதான் அறிவோமே நாமும்
சிறந்ததொரு தலைமைக்குச் சான்றென்றே அவரும்
சரித்திரத்தில் தனக்கென்றோர் சிறப்பதுவும் பெற்றார்

78. உயர்இலட்சிய வாதியென உலகினிலே திகழ்ந்து
உன்னதமாம் புகழ்தன்னை உரித்தாகக் கொண்டார்
அயராது பணிசெய்து அனைவரையும் வியப்பில்
ஆழ்த்தியவர் அதிசிறப்பின் அடையாளம் ஆனார்

79. முஸ்லிம்சே வைஓலிபரப் பையவரேதான் நன்கு
முயற்சித்து உயர்த்திட்டார் முன்னிலையில் ஆக
அஸ்தமிக்கா நிலையினிலே அவர்சேவை யாவும்
அமைந்தேதான் உள்ளதனை அறிவோமே என்றும்

80. முற்போக்கு மன்றங்களை முயன்றுபல ஊரில்
முறையாக அமைத்தவ்வூர் முன்னேறச் செய்தார்
பிற்போக்குக் கொள்கைக்கு புதைகுழியாய் ஆகி
புகழ்ச்சிக்கு உரியபல பணியெல்லாம் செய்தார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

81. பல்நூல்கள் வெளியிட்டுப் பெருமைகளும் பெற்றார்
பாங்காக மக்களுடன் பழகியுமே மகிழ்ந்தார்
கல்லாத மக்களுக்கும் கண்ணியமே கொடுத்தார்
காசினியில் இவர்போன்றோர் காண்பதுவோ அரிது

82. பழகுபவர் உள்ளங்களைப் பாங்குடனே கவரும்
பெரும்சக்தி பெற்றிருந்தார் புரிவோமே நாமும்
வழமையெனத் தன்தொகுதி வாழ்மக்கள் தம்மின்
வீட்டுடனே வீதிகளும் வலம்வந்தே வாழ்ந்தார்

83. மூதூரெனும் தொகுதிக்கு முதல்வன்என ஆகி
முன்னேற்றம் அதுகாண முயன்றுபணி செய்தார்
பாதகங்கள் பதிதனிலே பரவாமல் காத்தார்
பணிசெய்து வாழ்வதிலே பேரின்பம் கண்டார்

84. முத்தமிழின் சொத்தென்றே மூதூர்மஜீத் திகழ்ந்தார்
முதலோனின் கொடையென்றே மண்ணிலவர் ஆனார்
எத்தகைய இடரினையும் ஏற்றமெனக் கொண்டார்
எல்லோரும் மெச்சுகிற ஏந்தலராய் ஆனார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

85. தனியான பல்கலைக்கழ கம்முஸ்லிம் களுக்கு
தாய்நாட்டில் வேண்டுமெனத் தானுரைத்தே நின்றார்
இனிதின்று தென்கிழக்காய் ஸ்தாபகம் பெற்று
இருப்பதனைக் காண்கின்றோம் இதயமேதான் மகிழ

86. முத்துநகர் செல்வநகர் முழுவளவா னாறு
மற்றுமோ தீனேரி முதலியதாம் இடங்கள்
உத்தமத்தலை வர்மஜீது உருவாக்கித் தந்த
உயர்குடியேற் றம்தானே உரைப்போமே நாமும்

87. தக்வாநகர்க் குடியேற்றம் தந்தார்மூ தூரில்
தீர்க்கமிகு திட்டமேதான் தெரிந்திடுவோம் - நாமும்
அக்கறையே கொண்டவரும் ஆற்றிட்ட பணிகள்
அவர்சிறப்பை அகிலத்தில் அழகேதான் உரைக்கும்

88. கிண்ணியாவின் மணிமண்டபம் கதைத்திடுமே மஜீதின்
கீர்த்திதனை மக்களெலாம் கேட்டிடவே நாட்டில்
கண்ணியத்துக் குரியஅவர் காத்திரமாம் சேவை
காலத்தால் அழியாமல் காசினியில் ஓங்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

89. கட்டைபறிச் சான்பாலம் கட்டியுமே தந்தார்
கனசேவை தமிழர்க்குக் களிப்புடனே செய்தார்
பட்டிதொட்டி எல்லாமும் பயணமேதான் செய்து
பகுதியெலாம் அவருமே பாங்காக அறிந்தார்

90. நடமாடும் சேவைதனை நம்பகுதி தன்னில்
நன்றேதான் நினைத்ததனை நிகழ்த்திட்ட பெருமை
திடத்தலைவர் மஜீதவர்க்கே தான்சேரும் என்போம்
தலைமையிலே இவர்தலைமை தனிச்சிறப்பே என்போம்

91. கிண்ணியா பதி மூதூருடன் தோப்பூரிலும் நன்கே
கலைவிழாக்கள் நடாத்தியவர் காத்திரமாய் மக்கள்
எண்ணத்தில் நல்எழுச்சி ஏற்படவே செய்த
ஏந்தலராம் மஜீத்சிந்தை எவருக்கும் வாரா

92. வாலிபர்கள் சங்கங்கள் வலுவாக அமைத்து
வளம்பெறவே ஊரெல்லாம் வழிவகைகள் செய்தார்
போலியான தன்மைகளைப் புரிந்திடவே இளைஞர்
புத்தம்புதுக் கருத்துரையைப் புகட்டியேதான் நின்றார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

93. எடுத்திட்ட விடயத்தை ஏற்றமென எண்ணி
எப்படியோ விரைந்தவரும் எழிலாக முடிப்பார்
அடுக்காது அவருக்கு அவ்விடயம் பின்னே
ஆற்றுதலே அறிந்திடுவோம் அதுஉண்மை தானே

94. இனத்தினது விடுதலைக்கு இலட்சியக்குரல் ஆகி
இந்நாட்டு முஸ்லிம்களின் இனியபலம் ஆனார்
சனங்களது உள்ளமெலாம் சங்கமித்தே அவரும்
சரித்திரத்தில் அழியாத சிறப்பேதான் பெற்றார்

95. போதனாமொழி யாகப்பைந் தமிழதனை நாட்டில்
பற்றிடவே முஸ்லிம்களைப் பணித்திட்டார் மஜீதும்
சாதனையின் வேந்தன்எனச் சரித்திரமும் செப்ப
சிறந்ததொரு தலைவன்எனச் சிறப்புற்றார் அவரும்

96. இஸ்லாமிய இலக்கியமெனும் இன்னரிய பாடம்
இந்நாட்டுப் பரீட்சையிலே இடம்பெறவே செய்தார்
கஸ்டங்கள் தாங்கியவர் காத்திரமாம் திட்டம்
கனமாகச் செய்ததனைக் காலங்கள் செப்பும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

97. தன்தொகுதி மக்களினைத் தெரிந்தவர்தம் தேவை
தீர்ப்பதிலே என்றென்றும் திடமாக நின்றார்
தன்பணிகள் எல்லாமும் தன்தொகுதி மக்கள்
தேவைகளைச் செய்வதெனத் தினமுமவர் உரைத்தார்

98. தன்கட்சிக் கொள்கைகளைத் தரமாகக் காத்தார்
தினமுமவர் அதன்உயர்வில் திடமாக நின்றார்
என்றுமவர் எதிரிகட்கும் ஏற்றமதே செய்தார்
எல்லோரையும் தன்பக்கம் எடுப்பதற்காய் முயன்றார்

99. உள்ளமெலாம் தன்தொகுதி உணர்வினிலே இருந்தார்
உன்னதமாம் சிந்தனையில் ஊறியேதான் திளைத்தார்
கள்ளமிலா உள்ளமதன் காட்சியென ஆனார்
காசினியில் இவர்போன்றோர் காண்பதுவும் அரிது

100. தன்னையுமே நம்பிவந்த தொண்டர்களை என்றும்
தரத்தினிலே உயர்த்தியேதான் என்றும் மதித்தார்
என்றுமிவர் அநீதிகளை எண்ணியதும் இல்லை
எல்லோரும் என்னவரே என்றேதான் ஏற்றார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

101. நாட்டினது நாளாந்த நடப்பெல்லாம் அறிந்தார்
நல்லறிவு ஞானத்தின் நிலைக்களனும் ஆனார்
ஏட்டினிலே அவர்கருத்தை எழுதிடுவர் அறிஞர்
ஏற்றமென அக்கருத்தை ஏற்றிடுமே நாடும்

102. ஆண்டவனின் பேறெனவே அப்துல்மஜீத் ஆனார்
அரசியலில் அவர்தலைமை அதிசயமே யார்க்கும்
ஆண்டுகளோ பலநூறு ஆனபின்னும் அவரை
அறைந்திடுவர் மக்களெலாம் அகமுவந்து தானே

103. அரசியலின் அரங்கினிலே அவர்நாமம் ஓங்கும்
அவர்நினைவு வந்திடிலோ அழுதிடுவர் மக்கள்
வரலாறும் அவர்சிறப்பை வாழ்த்தியே நிற்கும்
வையகத்தில் அவர்பிறப்பு வசந்தத்தின் பிறப்பே

104. வீராதி வீரனென்றும் விளங்கியுமே நின்றார்
வசந்தமினம் காண்பதற்கு வருந்தியுமே உழைத்தார்
பாராளு மன்றத்தில் பேர்பெற்றே நின்றார்
பார்ப்பதற்கோ அவர்தோற்றம் போர்ச்சிங்கம் அன்றோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

105. நல்லதொரு தலைமைக்கு நல்லிலக்கணம் ஆனார்
நாட்டிலவர் நால்திசையும் நல்லறிமுகம் பெற்றார்
எல்லாவிதத் திறமைகளும் ஏற்றமென அடைந்தார்
ஏராள எதிர்ப்பினையும் ஏற்றேதான் ஜெயித்தார்

106. மூதூர்மஜீ தெனத்தன்னை மொழிவதிலே மகிழ்ந்தார்
முற்றாகத் தன்னையுமே மக்களுக்காய்த் தந்தார்
காதூர இனிமையுடன் கதைப்பதிலே தேர்ந்தார்
காண்போரைக் கவர்கின்ற கலையதுவும் அறிந்தார்

107. தாய்நாட்டில் அமைதிநிலை தழைத்தோங்க உழைத்தார்
தமிழ்முஸ்லிம் உறவுக்காய் தவியாகத் தவித்தார்
பாய்ந்தோடும் வெள்ளமெனப் பகன்றிடுவார் தமிழை
பற்றுதலோ தமிழ்மொழியில் பெரிதாகக் கொண்டார்

108. இனத்திற்காய் இன்னுயிரை இழந்திடவும் துணிந்தார்
இன்னதனை நிறைவேற்றி இவ்வுலகைத் துறந்தார்
சனங்களது மனங்களிலே சரித்திரமாய் ஆனார்
சாகாவரத் தலைவரெனச் சிறப்பினையும் பெற்றார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

109. பக்கத்துக் கடலினிலே பிடித்திடவே மீனைப்
பெருமுரிமை உள்ளதுபோல் பக்கத்துக் காட்டை
தக்கபடி வெட்டியதில் தகுபயிர்கள் செய்ய
திடவுரிமை உண்டென்று தானுரைத்து நின்றார்.

110. வாழையடி வாழையென வளநாட்டில் வாழும்
வள்ளல்நபி வழிமுறையில் வாழ்முஸ்லிம் இனத்தார்
கோழைகளோ அல்லரவர் கனஉரிமை கொண்டோர்
கருத்திதனைச் சொல்லியெமது கண்ணியமே காத்தார்

111. தனித்துவமே குன்றாத தேசியத்தைச் சொன்னார்
தன்னினத்து உரிமைகளைத் தட்டியுமே கேட்டார்
கனிந்திட்ட சிந்தனையின் கருவிடமும் ஆனார்
காலமெலாம் வாழ்கின்ற கீர்த்தியுமே பெற்றார்

112. மேடைகளில் உண்மைகளை முழங்கியபின் அதனை
மறுக்கவோ மறைக்கவோ முடியாதே என்பார்
வாடையிது அவர்பேச்சின் வழமையுமே ஈது
விளங்கிடுவோம் மஜீதவரின் வார்த்தையிது என்றே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

113. மூதூர்க்கு மஸ்கெலியா மின்சாரம் தன்னை
மஜீதேதான் கொணர்ந்திட்டார் முறையாக அன்று
ஏதுகுறை எனத்தேர்ந்து எல்லாமும் தீர்த்த
ஏந்தலரின் புகழ்மண்ணில் என்றென்றும் குன்றா

114. இஸ்லாமியக் கலைவிழாக்கள் இனிதாக நடத்தி
இந்நாட்டில் முஸ்லிம்களின் இனியகலாச் சாரம்
அஸ்தமிக்கா திருந்திடவே அப்துல்மஜீத் முயன்றார்
அவர்பணிகள் அத்தனையும் அதிசிறப்பே என்போம்

115. அரசாங்க நியமனங்கள் அதிகம்இளை ஞர்க்கு
அப்துல்மஜீத் அளித்ததனை அறிவோமே நன்கு
பரந்திட்ட சிந்தையுடன் பணியெல்லாம் ஆற்றி
பெரும்விருத்தி இனம்காணப் பாதையென ஆனார்

116. கலைக்கூடம் கூடுதலாய்க் கட்டியவர் கல்வியைக்
காத்திரமாய் உயர்த்திட்டார் கண்டோமே நாமும்
நிலையான விருத்திக்கு நற்பணிகள் அதிகம்
நம்பகுதிக் காற்றியவர் நாயகராம் மஜீதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

117. இருந்திட்ட கலைக்கூடம் இன்னும்தர முயர
இயன்றபணி செய்தேதான் இங்கவரும் கல்வி
பெருமளவு விருத்தியுறப் பாதையென ஆனார்
புரிந்தேதான் நாமுமிதை பதியினிலே உரைப்போம்

118. காணியிலா மக்களுக்குக் குடியேற்றம் அமைத்து
களிப்புமிகு வாழ்வளித்த காவலரும் மஜீதே
நானிலமும் மறவாதிதை நன்றியுடன் நோக்கும்
நாட்டினிலே இவர்தலைமை நமக்கமைந்த பேறே

119. நடமாடும் சேவைகளை நம்பதிகளில் நடத்தி
நல்லபெரும் நன்மைகளை நமக்களித்து நின்றார்
கடமைதனைக் கண்ணியமாய்க் காத்திட்ட தலைவர்
கண்ணியராம் மஜீதென்று கருத்துரைப்போம் நாமும்

120. அரசியலில் எதிரியென ஆனவரை எல்லாம்
அணுகுமுறை தன்னாலே அவர்களையும் தனக்குப்
பெரும்உதவி புரிகின்ற பாங்கரெனச் செய்தார்
பார்த்தவர்கள் அதிசயித்துப் பிரமிப்பே யுற்றார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

121. அரசியலும் இலக்கியமும் அருமையிரு கண்ணாய்
அப்துல்மஜீத் கருதித்தான் அதன்பணிகள் செய்தார்
அறுபாத்துடன் தியாகிமற்றும் அண்ணல்கவி தைகள்என
ஆனபல நூல்களையும் அவரெமக்குத் தந்தார்

122. எம்மினத்தின் தனித்துவத்தை ஏற்றமெனக் காத்த
ஏந்தலராய் மஜீதவரை எடுத்தியம்பி நிற்போம்
எம்மவர்கள் யார்எவர்க்கும் ஏவலர்கள் அல்ல
என்றவரும் செப்பியேதான் எம்ஏற்றம் காத்தார்

123. மக்களது மத்தியிலே மாபெரிய சிந்தனை
மலர்ச்சிதனை உருவாக்க மஜீதவரும் முயன்றார்
தக்கபல விழாவுடனே தரநூல்கள் தந்தும்
திறமாக முயன்றிட்டார் தெரிந்திட்டோம் நாமும்

124. முற்போக்கு வாலிபர்கள் மன்றங்கள் பலதை
மாவட்ட ஊர்சிலதில் முறையாக அமைத்து
கற்றவர்கள் வியக்கவேஎம் கலாச்சாரம் காத்தார்
கனத்தபல பணிகளுக்கும் காரணமாய்க் கொண்டார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

125. திட்டங்கள் தீட்டுவதில் திறன்மிகைத்து நின்றார்
தீட்டிட்ட திட்டமெலாம் திறன்படவே முடித்தார்
பட்டங்கள் பெற்றிருந்தும் பாமரர்கள் தம்மைப்
பாங்கரெனக் கருதிநல்ல பண்புடனே நடந்தார்

126. தன்னூரின் பகுதியெலாம் தான்நடந்தே சென்று
தக்கபடி பார்த்தறிந்து தேவையெலாம் தீர்த்தார்
உன்னதமாம் தலைமைக்கு உதாரணமும் என்றே
உத்தமராம் மஜீதவரும் உலகினிலே திகழ்ந்தார்

127. ஓய்வென்று மஜீதவரும் ஓர்நாளும் தூங்கி
ஓய்வாக இருந்ததனை ஒருபோதும் அறியோம்
பாய்ந்தோடும் நதிபோன்று பணியாற்றி உயர்ந்தார்
பகர்வோமே அவர்பணியோ பணியாற்றல் என்று

128. இலட்சியத்து வாதியென இப்புவியில் அவரும்
இலங்கிட்டார் என்பதனை இனிதேநாம் அறிவோம்
துலங்கிட்ட அவர்பண்பும் தூய்மையதே என்போம்
துடிப்பான தலைமையுமே துணிந்துரைப்போம் அவர்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

129. தன்னினத்தின் வருங்காலம் தனைப்பற்றி நன்கு
தினமுமவர் சிந்தித்துத் தீர்க்கமுறு முடிவை
நன்றென்றே விளக்கிட்ட நற்பணிகள் அறிவோம்
நம்மஜீதின் ஏற்றத்தை நாமுரைத்தே மகிழ்வோம்

130. போதனையின் மொழியாகப் பைந்தமிழை நம்மோர்
பற்றிடவும் பயின்றிடவும் பகன்றேதான் நின்று
சாதனையும் புரிந்திட்ட சங்கதியும் அறிவோம்
சரித்திரத்தில் அவர்நாமம் சாகாதே என்றும்

131. பதியுத்தீன் மஃமூத்தெனும் பெருந்தலைவர் தலைமையைப்
பற்றித்தான் மஜீதவரும் பணிசெய்தார் நன்கு
அதிகாரம் தனுக்கென்றும் அடிபணியாத் தன்மை
அவரையுமே அணிசெய்ய அகிலத்தில் திகழ்ந்தார்

132. வருங்கால சந்ததிக்கும் வாழ்வியலின் பாடம்
வளமாகத் துலங்கியதே வள்ளல்மஜீத் வாழ்வில்
பெருந்தூரச் சிந்தையுடன் புவிவாழ்ந்த மேதையை
பேரறிஞர் என்றேதான் புகழ்வோமே நாமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

133. முஸ்லிம்இனத் தனித்துவத்தை முனைப்பாக அவரும்
முழங்கித்தான் வந்ததனை முறையாக அறிவோம்
அஸ்தமிக்கா அவர்கருத்தை அப்படியே பற்றல்
அனைத்துமுஸ்லிம் மக்களதும் ஆனபெரும் கடனே

134. தனித்துவமற் றகுயில்போல் தாய்நாட்டில் நாங்கள்
தனித்துவமே இழந்தேதான் தாழ்நிலையில் வாழ்தல்
இனிதல்ல என்றேதான் இயம்பியவர் நின்றார்
இந்நாட்டில் எம்பங்கோ இமயம்போல் என்றார்

135. கலவரங்கள் வாராது காத்திடுவீர் என்றே
கடுமையான் வாஞ்சையுடன் கருத்துரைத்து நின்றார்
நலமாகும் தமிழ்முஸ்லிம் நல்லுறவு என்று
நாளுமவர் சொல்லித்தான் நம்மிடத்தே மிளிர்ந்தார்

136. நாட்டினிலே சிறுபான்மை நாமாக உள்ளோம்
நானிலத்தோ பெரும்பான்மை நாமேதான் என்போம்
காட்டினாரிவர் எம்பெருமை காத்திரமாய்த் தானே
காலத்தால் அழியாத கருத்தேதான் இவைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

137. நாட்டினது விடுதலைக்கு நல்லபெரும் உதவி
நல்கிட்டோர் முஸ்லிம்கள் நாங்கள்தான் என்றார்
ஊட்டியே இக்கருத்தை உரிமையுள்ள இனமாய்
உயர்வுறவே அன்னவரும் உரியவழி தந்தார்

138. தேசியத்து ஒற்றுமையோ தாய்நாட்டில் வளர்தல்
தரமாக நாடுயரத் தக்கவழி என்றார்
ஆசையது தாய்நாட்டில் அதிகமேதான் கொண்டார்
அவர்சிந்தை அத்தனையும் அதிசிறப்பே அறிவோம்

139. இந்நாட்டில் முஸ்லிம்கள் இரண்டாம்தரப் பிரஜைகள்
இல்லவென இயம்பித்தான் இலங்கிட்டார் என்றும்
தந்திட்ட அவர்கருத்தும் தரமாம்சே வைகளும்
தரத்தினிலே உயர்வென்று தெரிந்திட்டோம் நாமும்

140. தமிழேதான் முஸ்லிம்கள் தாய்மொழியென அவரும்
தீர்க்கமுடன் கருத்துரைத்துத் தமிழ்வளர்த்து நின்றார்
அமிர்தமொழி தமிழினிலே ஆசையது கொண்டு
அதுவளர அரும்பணிகள் அவரதிகம் செய்தார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

141. மஜீதென்று சொல்லுகையில் மனமெல்லாம் மகிழும்
மிகையல்ல இக்கூற்று மொழிவோமே நாமும்
நிஜமாக அவரைப்போல் நல்லதொரு தலைவர்
நிலத்தினிலே நாம்காணல் அரிதென்றே சொல்வோம்

142. தமிழ்முஸ்லிம் உறவுக்கு தனித்தபெரும் பலமாய்
தரணியிலே மஜீதவரும் திகழ்ந்திட்டார் இதனால்
சமர்தன்னில் ஈர்இனமும் சங்கமிக்க அவரும்
சிறிதளவும் இடம்கொடாது சமாதானம் காத்தார்

143. மண்ணினிலே மஜீதுயிரை மாய்த்தால்த்தான் தங்கள்
மாகொடுமை அரங்கேறும் மக்களுமே குழம்பி
கண்ணீரின் காவியமாய்க் கலவரத்தில் திளைப்பர்
கசடர்களும் எண்ணித்தான் கொடுமையிதைச் செய்தார்

144. கொடுமையது மண்ணினிலே குதூகலிக்க மஜீதும்
கிஞ்சித்தும் இடமளிக்கார் கண்டிட்ட கொடியோர்
இடுக்கணதை அவருக்கு இழைத்திடவே துணிந்தார்
இவருயிரை மாய்ப்பதற்கு இயன்றசதி செய்தார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

145. உயிருடனே மஜீதெம்பி ஊர்தன்னில் இருந்தால்
உருவாகா இப்பதியில் உயிர்க்கொலையின் கலவரம்
நயமாகப் பேசித்தான் நல்லமைதி தன்னை
நாயகனார் அவர்இங்கு நல்நிலையில் காப்பார்

146. தமிழ்முஸ்லிம் மக்களெலாம் தலைவர்மஜீத் அவர்க்குத்
தானடங்கிப் போய்விடுவர் தனித்தபெரும் உண்மை
தமக்கிவரும் உயிர்வாழ்ந்தால் தம்திட்டம் பிழைக்கும்
தீயர்களும் இவருயிரைத் தீர்த்திடவே முயன்றார்

147. ஆயிரத்துத் தொழாயிரத்தியெண் பத்தேழாம் ஆண்டு
ஆனபதின் மூன்றுகார்த்திகை மாதத்தில் அந்தோ
தூயசிந்தைத் தலைவரிவர் துட்டர்களின் கொடிய
துப்பாக்கிக் கிரையாகித் துறந்திட்டார் உலகை

148. மண்ணினிலே மஜீதவரும் மாய்ந்திட்ட சேதி
மக்களுமே கேட்டன்று மதியிழந்து போனார்
கண்ணீரால் மண்ணதனைக் கழுவிட்ட அவர்கள்
கவலையினால் களிப்பிழந்து காட்சியே தந்தார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

149. கொடியோரின் கொடுமையதால் குவலயமும் அன்று
கண்ணீரின் கோலமெனக் காட்சியளித் ததம்மா
துடிதுடித்து மக்களுமே துயரதனில் துவண்டு
துட்டர்களை மாய்த்திடவே தூயோனைக் கேட்டார்

150. மாதலைவன் மஜீதவரை மண்துறக்கச் செய்த
மாகொடுமைச் செயலதனை மண்ணுலகம் மறவா
பாதகமே புரிந்திட்ட பாவிகளை உலகும்
பொறுக்காதே ஒருபோதும் புரிவோமே நாமும்

151. மரணத்தில் மஜீதவரின் மரணத்தை எங்கள்
மனமதுவும் ஏற்றிடவே மறுப்பதுவும் காணீர்
உரமாகத் தன்னையுமே உரைத்தபடி தந்து
உலகத்தை விட்டகன்ற உன்னதத்தைப் பாரீர்

152. தரணிதனில் தலைமைபற்றித் தாகமுடன் எம்மோர்
தாம்கதைக்கும் பொழுதெல்லாம் தாவியங்கே மஜீதின்
தரநாமம் ஓங்கித்தான் திகழ்ந்திடுமே நன்கு
திடமான உண்மையிது தெரிந்திடுவோம் நாமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

153. மாதலைவன் மஜீதவரும் மண்ணுலகில் செய்த
மாசுகளை இறையோனும் மன்னிக்க வேண்டும்
சாதனைகள் புரிந்திட்ட செயல்வீரர் இவர்க்கு
சொர்க்கமது சொந்தமெனச் செய்திடவும் வேண்டும்

154. மரணத்தில் மஜீதவரின் மரணத்தை எங்கள்
மனமதுவும் ஏற்றிடவே மறுப்பதுவும் காணீர்
உரமாகத் தன்னையுமே உரைத்தபடி தந்து
உலகத்தை விட்டகன்ற உன்னதத்தைப் பாரீர்

155. இனமென்றே வாழ்ந்திட்ட இன்னரிய தலைவர்
இறவாப்புகழ் மஜீதவர்க்கு இறையோனே நீயும்
கனமாக உன்னருளால் காத்திரமாம் சொர்க்கம்
கிட்டிடவே கேட்கின்றேன் கொடுத்திடுவாய் இனிதே!

156. மஜீதுமாகா வியநூலிதை மொழிவோரும் வாழி
மஜீதுபுகழ் உரைப்போரும் மகிமையுடன் வாழி
நிஜமான தலைவரென நிலைபெற்ற அவரை
நினைப்போரும் நன்கேதான் நிலத்தினிலே வாழி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

157. மஜீதுமாகா வியநூலிதும் மண்ணுலகில் வாழி
மக்கள்மனம் நிறைந்திந்நூல் மாண்புடனே வாழி
நிஜமுரைத்த இந்நூலும் நிலத்தினிலே வாழி
நவின்றகவி அனஸ்நாமம் நானிலத்தே வாழி!

158. மண்ணுலகில் மஜீதுபுகழ் மாண்புடனே வாழி
மகிமைதனில் உயர்ந்தோங்கி மறையாது வாழி
கண்ணியமே பெற்றென்றும் காசினியில் வாழி
காலமெலாம் நிலைத்தேதான் வாழியவே வாழி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மஜீது புகழ்ப்பா

(அறுசீர் கழில் நெடிலடி)

நல்ல தலைவனென நம்நாட்டு அரசியலில்
எல்லோரும் போற்றிடும் ஏற்றத்தை – நல்முறையாய்ப்
பெற்ற மஜீதோ பதியில் எமக்கொரு
நற்பேறு ஆனார் நவில்

கிண்ணியா மண்ணின் நல்ல
கீர்த்தியாய் அன்று ஆன
கண்ணியர் அப்துல் லத்திப்
கவினுறு புதல்வன் ஆக
மண்ணினில் அப்துல் மஜீத்
மாண்புடன் பிறந்தார் அம்மா
எண்ணியே மக்கள் இன்றும்
ஏங்கிட வாழ்ந்தார் அம்மா

கல்வியில் நாட்டம் கொண்டு
கருத்துடன் சென்னை சென்று
பல்கலைக் கழகப் பட்டம்
பாங்குடன் பெற்றே மீண்டார்
கல்வியில் ஊரும் உயரக்
காத்திர அதிபர் ஆகி
நல்முறைப் பணிகள் ஆற்றி
நம்மவர் நெஞ்சம் நிறைந்தார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதியினை உயர்த்தும் நல்ல
பாதையாய் அவரும் அன்று
கதியினில் உணர்ந்து கொண்டார்
கட்சியின் அரசியல் தன்னை
விதியதும் ஆசி கூற
வெற்றியில் திளைத்தே நின்றார்
புதினம் என்றே பகரும்
புகழ்மிகு தலைமை தந்தார்

கல்லுடன் மண்ணும் நல்ல
களிப்புடன் கவிகள் பாடும்
நல்லரும் சேவை எல்லாம்
நாடியே அவரும் செய்தார்
வல்லவன் மஜீதே என்று
வாழ்த்திட நாடும் நன்கு
சொல்லதன் வேந்தன் என்ற
சிறப்பதும் பெற்றே உயர்ந்தார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களைக் கவரும் நல்ல
மாண்புறு சக்தி கொண்டார்
தக்கதோர் தலைமை தந்து
தனிப்பெரும் புகழும் பெற்றார்
அக்கறை கொண்டே இனத்தின்
அரும்பெரும் அரணும் ஆனார்
திக்கெலாம் புகழும் நல்ல
தலைவராய்ப் பேறே பெற்றார்

அச்சம் அறியா உள்ளம்
அழகுறு பேறாய்ப் பெற்றார்
துச்சம் என்றே உயிரைத்
துணிவுடன் கருதி நின்றார்
கச்சித மாகப் பணிகள்
களிப்புடன் செய்தே உயர்ந்தார்
எச்சம யவேளை எனினும்
எல்லாம் ஏற்கவே துணிந்தார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னத தன்மை யோடு
　　உயரிய நோக்கும் கொண்டார்
புண்ணியம் புரிந்தே புவியில்
　　பூரிப் படைந்து நின்றார்
நன்றென மக்கள் தேவை
　　நாடியே பூர்த்தி செய்தார்
என்றுமே அமைதி தன்னை
　　ஏற்றமாய் உவந்து வந்தார்

அரிதாம் பணிகள் யாவும்
　　அழகுறச் செய்து முடித்தார்
துரிதம் என்றே செயல்களைத்
　　துணிந்தவர் செய்தே உயர்ந்தார்
பரந்ததாம் சிந்தை தன்னால்
　　பாங்குறு சேவை செய்தார்
புரிந்துணர் வோடு என்றும்
　　பழகிடும் பண்பு பெற்றார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதி அமைச்சர் என்னும்
பெரிதாம் பதவி தன்னால்
அரிதாம் பணிகள் யாவும்
ஆற்றியே மகிழ்வு கண்டார்
உரமெனத் தனதாம் உயிரை
உயர்வுற இனத்திற் களித்து
பெருமகன் மஜீதே என்ற
பெருமையைத் தனதாய்க் கொண்டார்

தனித்துவம் குன்றாத் தேசியம்
தகுபடி உணர்த்தி நின்றார்
கனவிலும் இனத்தின் உயர்வைக்
கண்டவர் களிப்பே உற்றார்
இனங்களின் உறவு நாட்டில்
இனிதுறப் பாடு பட்டே
சனங்களின் உள்ளம் தன்னில்
சங்கமம் ஆகிப் போனார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணமதன் நோக்கே இன்றிப்
பண்பினில் திளைத்து நின்றார்
குணமது குடியே கொண்ட
கோமகன் என்றே ஆனார்
உணர்வெலாம் மக்கள் நலனின்
ஊற்றாம் உள்ளம் கொண்டார்
பிணக்குகள் யாவும் தீர்க்கும்
பெரிதாம் ஆற்றல் கொண்டார்

அரசியல் அரங்கில் அன்று
அழகுறு ஞானம் தன்னைச்
சிறப்புடன் எனக்குத் தந்த
சங்கையின் தலைவர் அஷ்ர.்.ப்
பெருமையாய்ப் போற்றி நின்ற
பெருந்தகை மஜீதே அம்மா
அரும்பெரும் தலைவர் என்றே
அவருமே வாழ்த்தி நின்றார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாய்மொழி தமிழும் நாட்டில்
தழைத்திட வகையும் செய்தார்
ஆய்ந்துநற் சேவை செய்த
அரிதாம் தலைவர் ஆனார்
பாய்ந்திடும் நதியைப் போல
பயனென மக்களுக் கானார்
வாய்த்தநற் பேறாய் அவரை
வாழ்த்தியே நாமும் மகிழ்வோம்

காடுகள் கழனி ஆகக்
கடற்றொழில் மேன்மை காண
வீடுகள் ஒளியில் மூழ்க
வீதிகள் சிறந்து ஓங்க
ஏடுகள் போற்றி நிற்க
ஏந்தலர் மஜீதும் அன்று
பாடுகள் அதிகம் பட்டார்
பகன்றுமே துதிப்போம் அவரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வியில் ஊர்கள் உயரக்
கலைக்கூடம்பல தந்தார்
நெல்வயல் நீரே காண
நெடுங்குளம் வாய்க்கால் காடிகள்
நல்லரும் இப்பணி யாவும்
நாடியே அவரும் செய்தார்
அல்லலே இல்லா வாழ்வு
அமைந்திட வழியும் தந்தார்

உன்னத தலைவர் என்றே
உலகினில் உயர்ந்த மஜீது
என்றுமே அழியா வண்ணம்
எழிலுறு புகழும் பெற்றார்
அன்னவர் மீது இறையும்
அருளினைச் சொரியக் கேட்டோம்
நன்றென அவரின் நாமம்
நானிலம் வாழிய வாழி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மஜீது குறள்

01. செந்தமிழின் மேன்மைக்காய் சீரியதாம் சேவைகளைத்
தந்தான் மஜிதென்போன் தான்.

02. நல்லதொரு நாவலனாய் நாட்டில் திகழ்ந்திட்ட
சொல்வேந்தன் தான்மஜிதாம் சொல்

03. சிங்கத் தலைமையெனச் செப்பும் அடைமொழியோ
தங்கியது நம்மஜிதில்த் தான்

04. தலைமைத் தனத்திற்கோர் தக்கதாம் சான்றாய்
நிலைத்தோன் மஜிதை நினை

05. இனஉறவு நாட்டில் இனிதோங்கச் சேவை
மனமுவந்தே செய்தான் மஜிது

06. அச்சமெனும் வார்த்தை அறியா மஜிதினது
உச்சத் தலைமை உணர்.

07. இனத்தின் நலனுக்காய் இன்னுயிரும் ஈந்த
கனபுகழோன் தான்மஜிதாம் காண்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

08. தீர்க்க தரிசனத்தில் தேர்ந்த தலைமையெனப்
பேர்கொள் மஜிதைப் புகழ்

09. எத்தகைய இன்னலையும் ஏற்றம் எனமஜிதும்
இத்தரையில் கொண்டார் இயம்பு

10. நாட்டின் நலனுக்காய் நற்பணிகள் செய்துமஜித்
காட்டியதை நன்றென்றே காண்.

11. நாட்டில் மஜிதின் நிகர்தலைமை ஆனவரைக்
காட்டல் அரிதென்றே கூறு.

12. காடுகளைச் செந்நெற் களனி எனமஜிதும்
பாடுபட் டாக்கினார் பார்.

13. அப்துல் மஜிதின் அருஞ்சேவை அத்தனையும்
செப்ப முடியாச் சிறப்பு

14. இன்பத் தமிழ்மொழியை இன்னுயிராய் நேசித்த
தன்மை மஜிதுக்கே தான்.

15. இனப்பகை நாட்டினில் இல்லாது போக
கனமாய் மஜிதுழைத்தார் காண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. மக்களெல்லாம் மெச்சும் மஜிதின் தலைமையதை
அக்கறையாய் ஆய்ந்தே அறி.

17. மூதூர் மஜிதை முழுநாடும் போற்றுகிற
காதூரும் காதைதனைக் கேள்.

18. நல்ல தலைமையதன் நற்சான்று என்றேதான்
சொல்லல் மஜிதைச் சிறப்பு

19. அப்துல் மஜிதின் அருந்தலைமை ஆனதுவோ
இப்பாரின் பேறாம் இயம்பு.

20. இனத்தின் நலனுக்காய் இன்னுயிரை ஈந்து
கனத்தில் மஜிதுயர்ந்தார் காண்.

21. தூரத்து நோக்குடனே துஞ்சாமைத் தன்மையதும்
ஆரம் மஜிதுக்காம் ஆய்.

22. தீர்க்க தரிசனத்தில் தேர்ந்தவன் என்றேதான்
பேர்கொள் மஜிதினைப் போற்று

23. அப்துல் மஜிதின் அருமைத் தலைமையது
ஒப்பற்ற ஒன்றாம் உணர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24. நல்ல தலைவனென நாடெல்லாம் போற்றுகிற
வல்லோன் மஜிதை விளங்கு

25. ஏற்றமிகு நற்றலைவன் என்றேதான் மக்களெல்லாம்
போற்றும் மஜிதைப் புகழ்

26. உண்மைத் தலைவனென ஊரே மஜிதவரைக்
கண்ணியமாய்க் கூறுவதைக் கேள்.

27. தனித்துவம் குன்றாத தேசியம் தந்த
இனியோன் மஜிதாம் இயம்பு

28. கல்லுடனே மண்ணும் கவிபாடும் சேவைகளை
அல்லோ மஜிதளித்தான் ஆய்.

29. இயலாது என்று இயம்பி மஜிதும்
அயர்ந்ததோ இல்லை அறி.

30. துஞ்சாமை கல்வி துணிவுடமை எல்லாமும்
தஞ்சம் மஜிதினில்த் தான்

31. மக்கள் பணியில் மகிழ்ந்த மஜிதென்போன்
தக்க தலைவனே தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

32. தலைமையின் சான்றாய்த் திகழ்ந்த மஜிதோ
நிலைத்தான் புகழில் நிலத்து

33. நல்வார்த்தை தன்னைத்தன் நாவில் நிறைத்திட்ட
சொல்வேந்தன் தான்மஜிதாம் செப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மஜீது வெண்பா

### (நேரிசை வெண்பா)

01. துஞ்சாமை கல்வி துணிவுடைமைப் பண்பெல்லாம்
தஞ்சம் எனமஜீதில் தங்கிட – அஞ்சாமை
அற்று அருந்தலைமை அன்னவனும் தந்தேதான்
பற்றுடன் செய்தான் பணி

02. எத்தனையோ இன்னல் எதிர்கொண்ட போதினிலும்
அத்தனையும் தாங்கி அருந்தலைமை - இத்தரையில்
தந்திட்ட தானைத் தலைவன் மஜிதென்போன்
நந்தவனமே பாலை நிலத்து

03. தனித்துவம் குன்றாத தேசியத்தை என்றும்
இனிதுறக் கூறி இனத்தைக் - கனிந்ததன்
ஆற்றலால் காத்திட்ட அப்துல் மஜிதவரைப்
போற்றிப் புகழும் புவி

04. தன்னின மேன்மைக்காய்த் தன்னுயிர் ஈந்தேதான்
நன்றே புகழ்படைத்த நாயகன் - என்றான
அப்துல் மஜிதவரின் அத்தனை சேவைகளும்
இப்பதியின் பேறாய் இயம்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

05. மக்கள் பணியில் மகிழ்வேதான் கண்டிட்ட
தக்க தலைவனாய்த் தான்மஜிதை – அக்கறையாய்ப்
போற்றிப் புகழ்ந்து புவியும் திகழ்வதனால்
ஆற்றலிலே மேன்மை அவர்

06. நல்ல தலைவனென நம்நெஞ்சம் நின்றிலங்கும்
சொல்வேந்தன் ஆனமஜித் சீர்மையைக் - கல்லுடனே
மண்ணும் கவிபாடும் மேன்மைகண் டோமிவன்
உண்மைத் தலைவன் உணர்.

07. கல்லுடனே மண்ணும் கவிபாடிப் போற்றுகிற
நல்லபெரும் சேவைகளின் நாயகனாம் - சொல்வேந்தன்
அப்துல் மஜீதின் அருந்தலைமை எங்களுக்கு
இப்பாரில் பேறே இயம்பு.

08. அப்துல் மஜிதவரின் ஆட்சித் தலைமையை
ஒப்பற்ற ஒன்றாய் உணர்ந்திடுவோம் - இப்பாரில்
அன்னார் தலைமை அதிசயம் என்றேதான்
நின்றிலங்கும் என்றும் நவில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

09. ஏற்றமிகு நற்றலைவன் என்றேதான் மக்களெலாம்
போற்றும் மஜிதின் பெருந்திறனை – ஆற்றலினை
எப்படித்தான் வாழ்த்திடினும் எல்லாம் அவருக்கோ
தப்பில்லா மாபொருத்தம் தான்.

10. உண்மைத் தலைவனென ஊரே மஜிதவரைக்
கண்ணியமாய் நோக்கிக் களிப்புற்று – மண்ணுலகில்
நாயனவன் பேறென்று நன்றே நவில்கின்ற
தூயநிலை தன்னைத் துலக்கு

11. தனித்துவம் குன்றாத தேசியத்தைச் செப்பி
இனிதே இனநலன் ஈங்கே – நனிசிறப்பாய்க்
காத்த மஜிதென்னும் கண்ணிய மாந்தரவர்
பூத்தார் புகழே புரி

12. செந்தமிழின் மேன்மைக்காய்ச் சீரியதாம் சேவைபல
தந்தான் மஜிதென்போன் தாரணியில் - அந்தப்
பெருந்தலைவன் மங்காப் புகழுடனே வாழும்
பெருமையுமே பெற்றான் புரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. நல்லதோர் நாவலனாய் நாட்டில் திகழ்ந்ததுடன்
சொல்வேந்தன் என்ற சிறப்பதுவும் - அல்லோ
அடைந்தான் மஜிதென்போன் அன்னோன் புவியும்
அடைந்திட்ட பேறாம் பகர்.

14. சிங்கத் தலைமையெனச் செப்பும் உவமையது
தங்கி அணியென்றே தானான — எங்கள்
தலைவன் மஜீதின் தலைமைச் சிறப்பு
நிலைக்குமே நாட்டில் நினை

15. தலைமைத் தனத்திற்கோ தக்கதோர் சான்றாய்
நிலைத்த மஜீதென்போன் நாட்டில் - கலைகட்டி
ஓங்கித் திளைத்த உயர்தலைவன் என்றேதான்
பாங்குடன் சொல்வோம் புரிந்து

16. இனஉறவு நாட்டில் இனிதோங்கச் சேவை
மனமுவந்து செய்த மஜிதோ — கனபுகழைத்
தன்னுடைமை ஆக்கிட்ட தானைத் தலைவனேதான்
நன்கிதைச் சான்றுரைப்போம் நாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17. அச்சம் அறியா அரும்பெரும் வீரனாய்
உச்சத் தலைமை உயர்சான்றாய் - இச்செகம்
நன்றே திகழ்ந்திட்ட நல்லார் மஜிதவரின்
உன்னதம் சொல்வோம் உணர்ந்து

18. கல்லுடனே மண்ணும் கவிபாடும் சேவைகளை
நல்முறையில் செய்திட்ட நாயகன் - அல்லோ
தலைவன் மஜிதாம் தெரிந்தோம் அவரோ
நிலைத்த புகழோன் நிலத்து

19. இயலாது என்று இயம்பி மஜீதும்
அயர்ந்ததை நாமும் அறியோம் - நயமுடன்
பேசியே சாதிக்கும் பண்பதும் கொண்டவரை
நேசிப்போம் நாமும் நிதம்

20. நல்ல தலைவனென நாடே புகழ்கின்ற
வல்லல் மஜீதவரோ வாய்த்திட்டார் - அல்லலில்
வாடிட்ட மக்கள் விடிவாய் அவர்க்குமோ
கூடிய மேன்மையாம் கூறு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21. இனத்தின் உயர்வதனை இன்னரும் நோக்காய்த்
தனதுளம் கொண்டே தரமாய்க் - கனசேவை
ஆற்றிய மாதலைவன் அல்லோ மஜிதென்று
போற்றிடுமே பூமி புரிந்து.

22. மக்களை ஈர்க்கும் மகத்தான பண்பெல்லாம்
தக்களவு கொண்டேதான் தன்னூரில் - அக்கறையாய்
என்றும் மஜீதிருந்து ஏராளம் பேர்புகழைத்
தன்னுடைமை என்றடைந்தார் தான்

23. அஞ்சாத நெஞ்ச அடையாளம் என்றாகி
நெஞ்சார எம்முள்ளம் நின்றிலங்கும் - துஞ்சாத
தன்மையது கொண்டிட்ட தானைத் தலைவனென
நன்றே மஜீதை நவில்

24. தன்னுயிரை ஈந்தேதான் தன்னினம் காத்திட்ட
உன்னதமே கொண்ட உயர்தலைவன் - என்றேதான்
என்றும் மஜிதவரை எண்ணிப் புகழ்ந்துநாம்
நன்கடைவோம் இன்பம் நிதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

25. நாட்டினிலே நல்லமைதி நாளும் நிலைகொள்ள
நாட்டமது கொண்டேதான் நன்நெறிகள் - காட்டிட்ட
அப்துல் மஜீதின் அரும்நாமம் பேர்புகழாய்
இப்பாரில் ஓங்கும் இயம்பு

26. தன்னுயிரைத் தானமாய்த் தந்தேதான் தன்னினத்தை
நன்முறையில் காத்திட்ட நாமமஜீத் - உன்னதத்தை
மண்ணுலகும் நன்கே மதித்தேதான் போற்றுவதை
எண்ணி அடைவோம் எளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எம் சமூக ஏற்றம்

எம் சமூக ஏற்றமாய் ஆகிப்போன
அருந்தலைவனே!
உன் தலைமை
வேதனையின் வேக்காட்டில்
வாடிக்கொண்டிருந்த எம் சமூகத்திற்கு
வசந்தத்தின் வருஷிப்பாய் ஆகிப்போனது

எங்களின் ஓர் நூற்றாண்டுத் தேவைகளை
ஒரு சில வருடங்களுள்
செயலுருப்படுத்திய
சாதனைத்தலைவனல்லா.....நீ

நீ.....கதைத்தாய்
எங்கள் கவலைகள் கலைந்து போயின
நீ....செய்தாய்
எம் தேவைகள் தீர்ந்து போயின
இவைகள்தான்
உன் அரசியலின் அலங்காரமாகியது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றும் எளிமையை உவந்த நீ
ஏழ்மையால் ஆராதிக்கப்பட்ட மக்களால்
ஏராளம் உவக்கப்பட்டாய்

எம் வரலாற்று ஏடுகளில்
உன் வாழ்க்கை
உன்னதமாம் இடத்தை
அணிசெய்து கொண்டே இருக்கும்

இந்த மஜீது தன்னைத்
தன் சமூகத்திற்காக
உரமாகவும் பசளையாகவும்
தந்துவிட்டான் என்று
நீ பகன்ற வார்த்தையை
உயிர்ப்படையச் செய்யவேதான்
துப்பாக்கி ரவைகள்
ஊன் மேனியைத் தழுவ
இடம் கொடுத்தாய்

ஆம்...உயர்ந்த உள்ளங்கள்
தம் மரணத்தை
முன் கூட்டியே தெரிந்துகொள்ளும்
தீர்க்கதரிசனத்தில் திளைத்திருப்பது
புதுமையல்லவே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன் உரை உடை நடை யாவும்
ஆயிரம் அர்த்தங்களின்
அடிப்படையாய் அல்லவா!
ஆகிப் போனது

பணம் சேர்க்கும் அரசியலில்
நீயோ.....
உன் வங்கிக் கணக்கை
வெறுமையாய் அல்லவா!
விட்டுச் சென்றாய்

மக்கள் சேவகனே
மகேசன் சேவகன் என்ற மணிமொழி
உன்னால்த்தானே
இங்கே உயிர்ப் படைத்தது

மக்களை மகிழ்ச்சியில்
துலங்கச் செய்வதில்
மகிழ்ச்சி கண்டவனே!
மக்களை வசீகரிக்கும் ஆற்றலும்
உன் வாய்க்குத்தானே
வரமாகிப்போனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகத்தின்
வருங்கால வனப்புப் பற்றித்
தீர்க்கத் தரிசனமாய்ச் சிந்தித்தவனே!
நிகழ்கால நிதர்சனங்களையும்
நீதானே! எமக்குணர்த்தினாய்

தன்னை
மூதூர் மஜீதென்று மொழிவதில்
மகிழ்வு கண்டவனே!
அன்று....மூதூரின் மகிழ்வாகவும்
நீயேதான் மிளிர்ந்தாய்.

தமிழ் முஸ்லிம் இனங்களின்
உறவுப்பாலமாய்த் திகழ்ந்த நீ
மண்ணை விட்டு மறைந்து போனதால்த் தான்
இங்கு இனப்பகைமைப் பிரளயம்
பெருக்கெடுத்தோடியது

செந்தமிழின் செழுமைக்கு
உரமாக உதவியவன் நீ
இதனால்......
தமிழின் விழாப்பொழுதுகளிலெல்லாம்
உன் உருவை
எம்மால் தரிசிக்க முடிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நாட்டில் இஸ்லாமிய இலக்கியம்
இயம்பப்படும் பொழுதெல்லாம்
மஜீதென்னும் நாமம்
மறக்கப்பட முடியாததாகி விட்டது.

திருகோணமலை மாவட்ட முஸ்லிம் சமூகத்தின்
தலைமைத்துவத் தேடல்களின் வேளையெல்லாம்
அப்துல் மஜீதென்னும் உன்நாமம்
ஆங்கே ஓங்கி ஒலிக்கப்படும்.

இந்நாட்டில்
முஸ்லிம் சமூகத்தின் தனித்துவம்
உன் சிந்தனைப்பரப்பில்த்தான்
தழைத்தோங்கின.

மஜீதே....நீ ஓர்
அரசியல் கலாபீடம்
உன்னை நெருங்கிவர்கள்
ஞானத்தின் களஞ்சியமாய்க்
கருதப்பட்டார்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மஜீதென்னும் மாநதியே!
கொலை என்னும் வறட்சியினால்....நீ
வறண்டு போகாதிருந்தால்
மூதூர் கிண்ணியா தோப்பூர் பிரதேசங்கள்யாவும்
சொர்கா புரியின் சாயலாகவே இன்று தரிசனம் தந்து
கொண்டிருக்கும்.

அபிவிருத்தியின் அர்த்தமாய் ஆகிப்போனவனே!
அப்துல் மஜீதே!
உன் மறைவோடு...........
மூதூர்த்தொகுதியின் விருத்தியும்
குன்றிப் போனதே!

ஊர்களின் உயர்வு பற்றி
ஆயிரமாம் கனவுகளைக் கண்டவனே!
காரியங்கள் ஆகாமல்
கனவுகளை எல்லாம் கலைத்து விட்டதே!
உன் மரணம்.

அப்துல் மஜீதே!
உன் தலைமைத்துவ நதிக்கரை யோரத்தில்த்தான்
எம் எழச்சி நாகரீகம் தழைத்தோங்கியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதலைவன் மஜீதே!
உன் கபுறறை
முஸ்லிம் சமூகத்தின்
தனித்துவம் இங்கே உறங்கிக் கிடக்கிறதென்றும்.
அதன் முன்னேற்றம்
இங்கே முடங்கிக் கிடக்கிறதென்றும்.

அதன் உரிமைக்குரல்
இங்கே ஒடுங்கிக் கிடக்கிறதென்றும்.
அதன் எழுச்சி
இங்கே புதைந்து கிடக்கிறதென்றும்.
ஒலித்துக் கொண்டிருக்கிறது.

இறைவனே!
உன் கருணை நதியில்
அப்துல் மஜீதெனும் எம் தலைவனை
மூழ்கச் செய்துவிடு!
உன் மேலான சொர்க்க பதியின்
சொந்தக்காரர்களில் ஒருவனாக
அவரை ஆக்கிவிடு!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன் வழிகாட்டல்கள் தான்
எம் அரசியல் நாகரீகத்தில்
உன்னத இடத்தை
உரித்தாக்கிக் கொண்டிருக்கிறது

மனித உள்ளங்களை
ஈர்க்கும் ஆற்றல் கூட
உனக்குத்தானே
உரித்தாகிப் போனது

உன் எதிரிகள் கூட
உன்னை வாழ்த்துரைக்கும் அளவுக்கு
அவர்களை நீ
வசிகரித்துக் கொண்டாய்

இந்நாட்டில்
எங்கள்
அரசியல் அரங்குகளில் எல்லாம்
அப்துல் மஜீதென்னும் நாமம்
என்றும் மறக்கப்பட
முடியாத அளவுக்கு
முக்கியத்துவமாகி விட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் தலைமையை
அணிசெய்த உன்னை
நினைக்கும் போதெல்லாம்
எம் உள்ளம்
மகிழ்ச்சிப் பிரளயத்தில் மூழ்குகின்றது.

உன் பெயரை
உரைக்கும் போதுதான்
திருகோணமலை மாவட்ட அரசியல்
அர்த்தமுடைய தாகின்றது

இந்த......
அப்துல் மஜீதென்னும்
அரசியல் ஆளுமைக்குள்
ஆயிரமாயிரம்
ஆட்சியியல் தத்துவங்கள்
அமிழ்ந்து கிடப்பதை
தூரப் பார்வையின் உள்ளங்கள்
துலக்கமாகக் கண்டுகொண்டிருக்கின்றன

எங்கள்
அரசியல் எழுச்சியின் ஏடாகவும்
நீயே தான்
மளிர்ந்து கொண்டிருக்ககிறாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்நூலாசிரியரின் வெளிவந்த ஏனைய நூல்கள்

1. அமைதிப் பூக்கள் (கவிதை)
2. மூதூர் உயர்நெய்னார் புலவர் கவிதைகள் (தொகுப்பு)
3. மூதூர் உமர்நெய்னார் புலவரின் சீறாப்புராணஉரை (மறுபதிப்பு)
4. மனிதம் (கவிதை)
5. ஊர்துறந்த காவியம்
6. மூதூர் எஸ் எல் எம் முகைதீன் கவிதைகள்
7. அன்பின் மகனுக்கு (கடிதங்களின் தொகுப்பு)
8. அதிமேதகு ஜனாதிபதிக்கு ஓர்மடல்
9. நாயகக் காவியம் (மாகாண சாகித்திய விருது பெற்றது)
10. இஸ்லாமியக் குறள் (காத்தான்குடி - பள்ளிவாயல்கள் முஸ்லிம் சங்கங்கள் சம்மேளனம் விருது பெற்றது)
11. மழலைக் கீதம்
12. அஷ்ரஃப் அமர காவியம்
13. வாப்புமரைக்கார் வழிக்காவியம்
14. யதார்த்தம் (கவிதை)
15. எந்தன் ஊரே (கவிதை)
16. கவிஞர் மூதூர் எஸ் எல் எம் முகைதீன் கவிதைகளில் மூதூர் மீனவர்களின் உயர்ச்சி நாட்டம் (ஆய்வு)
17. கவிஞர் மூதூர் எஸ் எல் எம் முகைதீன் கவிதைகளில் தலைமைத்துவத் தகைமைகள் (ஆய்வு)
18. வசந்தம்
19. நண்பனை நவிலும் நா
20. தங்கத்துரைக் காவியம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## குறள்

* ”தலைமைத் தனத்திற்கோர் தக்கதாம் சான்றாய்
நிலைத்தோன் மஜிதை நினை”

* ”சிங்கத் தலைமையெனச் செப்பும் அடைமொழியோ
தங்கியது நம் மஜிதில்த்தான்”

* ”தீர்க்க தரிசனத்தில் தேர்ந்த தலைமையெனப்
பேர்கொள் மஜிதைப் புகழ்”

* ”இனத்தின் நலனுக்காய் இன்னுயிர் ஈந்த
கனபுகழோன் தான்மஜிதாம் காண்”

* ”இனவுறவு நாட்டில் இனிதோங்கச் சேவை
மனமுவந்து செய்தான் மஜிது ”

## நேரிசை வெண்பா

* ஏற்றதோர் நற்றலைவன் என்றேதான் மக்களெலாம்
போற்றும் மஜிதின் பெருந்திறனை - ஆற்றலினை
எப்படிதான் வாழ்த்திடினும் எல்லாம் அவருக்கோ
தப்பில்லா மாபொருத்தம் தான்

* இனத்தின் விடிவதனை இன்னரும் நோக்காய்த்
தனதுளம் கொண்டே தரமாய்க் - கனசேவை
ஆற்றிட்ட மாதலைவன் அல்லோ மஜிதென்று
போற்றிடுமே என்றும் புவி

*மூதூர்.எம்.எம்.ஏ.அனஸ்*

ISBN 978-955-42444-5-0
9 789554 244450

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org